உ
கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உஉ.] ருதிரோற்காரி௵ பங்குனிமீ [பகுதி ரு.
Vol. XXII. March-April-1924. No. 5.

பெருங்கதை.

இப்பெயர்படைத்தோங்கிய மாப்பெருங்காப்பியம் நெடுங்காலமாகப் பயில்வாரின்றி, ஸ்ரீகோசத்தறையுட் புதைந்துமறைந்து புதையல் நிதியா யிருந்ததை அறிந்து, அஞ்சனந்தீட்டியாராய்ந்து, படியெடுப்பித்துப் பலபடப்பெருக்கி, தமிழுவறிஞ ரெல்லோரும்பெற்றுத் தமிழ்ப் பெருஞ்செல்வராய்வாழுமாறு சிந்தாமணிதந்ததுபோலத் தந்தருளும் ஸ்ரீமந் மஹாமஹோபாத்தியாய பிர்ம்மஸ்ரீ வே. சாமிநாதையரவர்களுக்கு இத்தமிழுலகம் செய்யத்தக்க கைம்மாறு என்னென்றுசொல்லற்பாலது; "செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும், வானகமு மாற்றலரிது" என்ற பொய்யாமொழி பொய்ப்பதோ ?

அடியார்க்குநல்லார் சிலப்பதிகாரவுரைப்பாயிரத்துள், இடைச்சங்கப் புலவராற்செய்யப்பட்ட "கலியும், குருகும், வெண்டாளியும்முதலிய செய்யுளிலக்கியம் ஆராய்ந்துசெய்த உதயணன்கதை" என்றமையானும், வீரசோழியவுரையுள், "குண்டலகேசியும், உதயணன்கதையும் முதலாகவுடையவற்றில், தெரியாதசொல்லும் பொருளும வந்தனவெனின்........அவைசெய்தகாலத்து அச்சொற்களும் பொருள்களும் விளங்கியிருக்கும்" என்றமையானும் இக்காப்பியம் மிகப் பழமைவாய்ந்ததென்று விளங்கும்

இன்னும், "திருத்தக்க மாமுனிசிந்தாமணியுங்கம்பர், விருத்தக் கவித்திறமும்வேண்டேம்—உருத்தங்க, கோங்குவேண்மாககதையுங் கூறேன்குறளனுகேம்" என்னும் பழம்பாட்டினுள், சிந்தாமணி திருக்குறள்களோடொட்டுவைத்து இந்நூல் எண்ணப்பட்டிருப்பது

கொண்டும், இது, சொன்னயம், பொருணயம், தொடைநயம், நடைநயம் தொனிநயம் முதலிய பலநயங்களும் பொருந்தியதென்பதும் அறியலாம்.

இவ்வாறாகப் பழமையும் பெருமையும்வாய்ந்த இம்மாப்பெருங் காப்பியத்தின்வரலாறுமுதலியவற்றையும், இந்நூலா லுய்த்துணர்ந்து கொள்ளக்கிடக்கும் ஒழுக்கமும், வழக்கமும், நீதியும், நிலைமையும், நடையுடைமுதலிய பலவகைநிகழ்ச்சியும், ஆராய்ந் திடர்ப்பட்டறிய வேண்டாது யாவரு மெளிதினுணர்ந்துகொள்ளுமாறு தெளிவுபெறக் காட்டிய முகவுரையோடு, இந்நூலாசிரியர்வரலாறும், இந்நூலைப்பற்றிய அருமையான பலகுறிப்புக்களும், அபிதானவிளக்கமும், பிறவு மாராய்ந் தெழுதியிருப்பது பாராட்டத்தக்கது.

இக்காப்பியத்தலைவனான உதயணனது சரித்திரச்சுருக்கமொன்று இனியதமிழ்நடையில் எல்லோரும்படித்துணரும்படி ஆங்காங்கமைத் தற்குரிய நூலகத்துள்ள அகவலடிகளை யிடையிடையேமடுத்துத் தொடுத்து இருநூறுபக்கம்வரை அழகிதாயெழுதியிருப்பது அகமகிழத் தக்கது.

இந்நூலின் முன்னும் பின்னும், இடையும் இல்லாத பாட்டுப் பகுதிஅடிகளைப் புள்ளிகளிட்டுக் காட்டி, உள்ளனவற்றை ஐந்நூறு பக்கங்களி லமைத்து, இவற்றிற்குக் குறிப்புரையும், அரும்பதமுதலிய வற்றின் அகராதியும், ஆராய்ச்சியாலறிந்த பிறவும் நானூறுபக்கங்கள் அச்சிட்டுச்சேர்த்து முழுதும் ஆயிரம்பக்கம்அடங்கிய பெரியபுத்தக மாக்கி வெளியிட்டிருக்கும்பெருமை பிறிதொன்றா லளவிடத்தக்க தன்று; "பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங், கருமமே கட்டளைக் கல்" என்பது சான்று. "பெருமையுடையவ ராற்றுவார் ஆற்றின், அருமை யுடைய செயல்" என்பதும் ஈண்டறியத்தக்கது.

இவ்வாறாகத் தமிழகத்துள்ள அரும்பெரும் பழங்காப்பியம்பல வற்றையும்ஆராய்ந் தச்சிட்டுபகரித்து வரும்ஐயரவர்களுக்குமேன்மேலும் ஆயுளும், ஆற்றலும், சுகவாழ்வும் வளர எல்லாம்வல்ல ஸர்வேசன் திருவருள்புரிவானாக.

திரு. நாராயணையங்கார்,
பத்திராதிபர்.

தாய்மொழியை வளர்த்தல்.

இத்தலைத்தொடர், 'மொழி என்பது யாது? தாய்மொழி என்பதன் பொருள் என்னை? நமது தாய்மொழி யாது? அதன் தொன்மையும் மேன்மையும் எத்தகையன? வளர்த்தல் என்பது யாது? ஏன் வளர்த்தல் வேண்டும்? வளர்க்காவிடில் வரும் இழுக்கென்னை? வளர்த்தலால்வரும் பயன் யாது?' என்ற பலபகுதிகளாக்கிக் கூறுவதால் ஒருவகையாக விரித்துரைக்கப்படலாம். ஆதலின், அம்முறையிற் சிறிது கூறுவேன்.

மொழி.

இது, மக்களாவார் ஒருவர்கருத்தைப் பிறிதொருவருக்குத் தெரிவிக்கத் துணைபுரிவது; அவர்களை விலங்கினத்தினின்றும் வேறுபடுத்தி உயர்த்துவது; சான்றோர் பலரும் அவ்வப்பொழுது ஆராய்ந்து அறிந்த பெறலரும் உண்மைக்கருத்துக்களைத் தாம்உணர்வது மாத்திரம் அன்றித் "தா மின்புறுவ துலகின் புறக்கண்டு—காமுறுவர் கற்றறிந்தார்" என்றபடி பிறர்க்கும் அறிவித்து அவரையும் பயன்படச்செய்யும் பெருமையினை ஒவ்வொருவருக்கும் தரவல்லது; செவிப்புலனும் அணுவாகிய ஒலிநுட்பங்களால் உண்டாவது; உலகினரால் மொழியப்படுவது.

தாய்மொழி.

உலகம் பலவேறுநாடுகளாக அமைந்திருக்கின்றது என்பது யாவரும் அறிந்ததே. ஒவ்வொரு நாட்டினரும் தத்தம் உள்ளக்கருத்துக்களை ஒருவரோடொருவர் அளவளாவிக் கலந்துகொள்ளவேண்டியதும் இன்றியமையாததொன்றும். ஆதலின், அம்முறையில் ஒவ்வொரு நாட்டினரும் தாம் தாம் நினைத்தவற்றையும், கண்டவற்றையும், அறிந்தவற்றையும் தத்தம் இயற்கைக்கும், அறிவுக்கும், நாகரிகத்திற்கும் ஏற்றவாறு ஒருவரோடொருவர் அளவளாவத்தக்கவகையில் தனித்தனி மொழிகளைப் படைத்துக்கொள்வாராயினர். அங்ஙனம் ஒவ்வொரு நாட்டினரும் படைத்துக்கொண்டமொழியே அந்த அந்த நாட்டினர்க்குத் தாய்மொழியாவது. இதனை நாட்டுமொழி, நிலத்துமொழி என்றும்:

தேசபாஷை என்றும் கூறுப. இதனை, "நாம் குழவிப்பருவந்தொட்டுப் பயின்றுவந்தது; இன்பிலும் துன்பிலும், யாண்டும், என்றும் நம்மோடு பயில்வது" எனக் கூறிச் சிறப்பிப்பர் அறிஞர். "தாய்மார்கள் இயல்பாகப்பேசும் மொழிகளே தாய்மொழிகளாம்" என்ற கருத்துப்பட ஓர் இடத்தில் வரைந்தருளினர் மகாத்மா காந்தி அடிகளும்.

நமது தாய்மொழி.

நாம் என்றசொல்லுக்குப் பொதுவாக 'உலகத்துத்தோன்றிய மக்களாகிய நாம்' என்ற பொருள் கூறப்படலாம்; எனினும், இங்கு, யான் இதற்குக்கொண்ட பொருள் 'தண்டமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழர்களாகிய நாம்' என்பதேயாம். கடவுளருளால் நமக்குத் தாய்மொழியாக அமைந்துள்ளது, "அனைத்துலகும் இன்பமுற எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழ் அணங்கு" எனச் சிறப்பிக்கப்பெற்ற செந்தமிழ்மொழியாம் என்பதும் போதரும்.

தமிழ்மொழியின் தொன்மையும், மேன்மையும்.

செந்தமிழாம் தெய்வமணங்கமழும் நமது தாய்மொழியோ பலவாய அரிய கருத்துக்களையும் எளியநடையில் எவர்க்கும் இனிது விளங்கும் வண்ணம் எடுத்துரைக்கும் ஆற்றலை இயற்கையிலேயே பெற்றிருக்கின்றது என்பது ஆராய்ச்சியாளர் துணிபு. அன்றியும், அது, நமது பண்டைக்கால வழக்க ஒழுக்கங்களை மரபுநிலைதிரியாது எவரையும் இனிது உணர்ந்துகொள்ளச் செய்யவல்லதும், பிறமொழிகளுக்கில்லாத சில சிறப்புக்களுடன் கூடியதும், நவிலுந்தோறும் புதுப்புதுக்கருத்துக்களைத் தோற்றுவிப்பதும்ஆகிய தொல்காப்பியம் முதலிய பலசிறப்பட்ட இலக்கணநூல்களையும்; இயற்கையின் வனப்பை இற்றெனத் தெரிவிக்கத்தக்கனவும், பண்டைப்புலவர்கள் அரசர்கள் வீரர்கள் வள்ளல்கள் முதலாயினருடைய அரிய சரித்திரங்களை வரலாற்றுமுறையுடன் அறியத் துணைசெய்யக்கூடியனவும் ஆகிய நற்றிணை, பத்துப்பாட்டு முதலிய சங்கத்தொகைநூல்களையும்; விரிந்த பலவாய உயர்ந்த கருத்துக்களை மிகச்சுருங்கிய தொடர்மொழிகளால் எவர்க்கும் எளிதில்விளங்குமாறு எடுத்து இடித்து உரைக்கவல்லதும், படிக்குந்தோறும் இன்பமூட்டிப் பண்படுத்தி உலகினருக்குப் பயன்படுமாறு படிப்போரைப் பக்குவப்படுத்திவருவதும், வடமொழி ஆங்கிலம் முதலிய பல மொழியாளரும் மொழிபெயர்த்துக்கொள்ளும் பெருமையினைப்பெற்றதும், எம்மதத்தின

ரும் தம்மதத்தினது எனப் போற்றத்தக்க சமநோக்குள்ளதும் ஆகிய திருக்குறள்போன்ற பல நீதிநூல்களையும்; புதுப்புதுக் கற்பனைகள் நிறையப்பெற்ற சிந்தாமணி, இராமாவதாரம்போன்ற பல பெருங்காப்பியங்களையும்; உள்ளதை உள்ளவாறுகூறிக் கற்போரை இன்புறுத்தும் சிலப்பதிகாரம், தொண்டர்புராணம்போன்ற தனித்தமிழ்ச் சரிதநூல்களையும்; 'சிந்தைக்கினிய செவிக்கினிய' ஆகவும் 'வந்த இருவினைக்கு மாமருந்து' ஆகவும் உலகினராற் பெரிதும் போற்றப்படுவனவும், படிக்குந்தோறும் படிப்போரை உளங்கனிந்து நெக்குருகி மயிர்க்குச்செறிந்து ஆனந்தக்கண்ணீர்சொரியும்வண்ணம் செய்துவருவனவும், பத்திச்சுவை நனி சொட்டச்சொட்டப் பெருக்கெடுத்துவெள்ளம்போல் ஓடுகின்றனவும் ஆகிய தேவாரம், திருவாசகம், நாலாயிரப்பிரபந்தம், திருவருட்பாப்போன்ற அருளிச்செயல்களாகிய அன்பும் அருளும் நிறைந்த பல துதிநூல்களையும்; இலக்கணங்களையும் காப்பியங்களையும் பிறவற்றையும் கற்றற்குத்துணையாமாறு பலவகைப்பட்ட அரிய முடிபுகளையும், கருத்துக்களையும் தம்மகத்துக்கொண்டு, எவர்க்கும் இளமையிலேயே அவையிற்றை வரலாற்றுமுறைப்படி எளிதிற்புகட்டவல்ல பெருமையினையுடைய சிவப்பிரகாசர் பிரபந்தத்திரட்டு, சொட்டுஞ்சுவையார் அட்டப்பிரபந்தம்போன்ற பல சிறு காப்பியங்களையும்; தண்டமிழ்மூதாட்டியாம் ஒளவையின் பலதிறப்பட்ட அருளிச்செயல்களையும்; பலவான ஞானநூல்களையும்; மருத்துவ நூல்களையும், சோதிட நூல்களையும்; பிறமொழிகளிலுள்ள அரிய பெரிய கருத்துக்களைத் தன்பால் மொழிபெயர்த்துச் சேர்த்துக்கொள்ளத்தக்க சொல்லாற்றலினையும் பெற்றிருக்கின்றது. அன்றியும், அது தன்னைத் தாய்மொழியாகக்கொண்ட ஓர் அரசரையும்; பல ஜமீந்தார்களையும்; பலமடாதிபதிகளையும்; பல நூறு பெரும் பொருளாளர்களையும்; சற்றேறக்குறைய இருநூறுலட்சம் மக்களையும்; பல தர்மஸ்தாபனங்களையும்; பலகழகங்களையும்; பல ஸ்தல சுயஆட்சிஸ்தாபனங்களையும்; இரண்டு துரைத்தனங்களையும்; தினசரி, வாரம்மும்முறை வாரம் இருமுறை, வாரம் ஒருமுறை மாதம் மும்முறை, மாதம் இருமுறை, மாதம் ஒருமுறை, ஆக வெளிவந்து மக்களது அறிவு ஆற்றல்களைப் பலதுறைகளிலும் காலத்திற்கேற்றவாறு உயர்த்துகின்ற பல பத்திரிகைகளையும்; பிறவற்றையும் பெற்றிருக்கின்றது. இம்மட்டோ அதன்பெருமை? அஃது இவ்வளவோடுநில்லாது வளர்வதற்

கும் வளர்ப்பதற்கும் தகுதியாகப் பெருமைபொருந்திய, உலகவழக்கி லுள்ள, பேசுமொழியாகவும் இருக்கின்றது. இங்கு, இதைப்பற்றிப் பன்னிப்பன்னிப் பல கூறலாம். எனினும் அங்ஙனம் மிகைபடக் கூறாது, இதனைப்பற்றிச் சில ஆண்டு (1920) களுக்கு முன் னர்த் திருச்சிராப்பள்ளியிலே நடைபெற்ற சென்னைமாகாணத்தின் இரண்டாவது தமிழ்ப்பண்டிதர் பெருங்கூட்டத்தில் அதன் வரவேற்புக் கழகத்தலைவர், ஆண்டுக்குழுமிய புலவர் பலர்க்கும் நல்வரவுகூறுகையில் மொழிந்தவற்றுள், சிலவற்றைக் குறிக்கின்றேன். அவை வருமாறு:—

"நமது தமிழ்மொழியோ மக்களது காலக்கணக்கைக் கடந்ததொரு பழங்காலத்திலேயே ஒருசீரடைந்து சிறப்புறுவதாயிற்று. பழமாண்புடை யோர் எனப்படும் பாபிலோனியர், எகிப்தியர், யவனர் முதலாயினோரும் தொன்மையைநோக்கின் தமிழைவென்றவர்களல்லர். உலகந்தோன்றியது தொடங்கி நடுக்கின்றி நிலைத்திருப்பதாகக் கண்டவரையும் கேட்டவரை யும் மலைக்கச்செய்வதும், ஈடும் எடுப்பும் அற்றுத் தனிப்புகழ் தனக்கே உரிமையாக உள்ளது எனயாவராலும் ஒப்ப வியந்து கூறப்படுவதும் ஆன பேரிமையமலையும் தோன்றுதற்குமுன்னரே தான் தோன்றித் தனிச் செங்கோல் ஓச்சியது தமிழ்மொழி என்னின், இதன் பழமையை ஆராய வல்லார் யாவர்? இப்பொழுது நீர்ப்பரப்பாய்ப் பரந்துகிடக்கும் தென் னாழி முழுதும் நிலப்பரப்பாய்விரிந்திருந்தஞான்று அந்நிலப்பரப்பில் வழங்கிவந்தது நமது பழந்தமிழே ஆகும். அவ்வாறு பரந்துகிடந்த பெருநிலப்பகுதிதான் இவ்வுலகத்து முதன்முதல் தோன்றிய நிலப் பகுதியென்றும், அந்நிலப்பகுதியிலேதான் மக்கள் முதன்முதல் தோன்றி னார்களென்றும், இப்பொழுதுள்ள பழங்கலைப்புலவர்கள் பலரும் அறி விக்கின்றமையால், ஆண்டு வழங்கிய நமது பழந்தமிழ்மொழியே கைக் குறியாற் கருத்தை விளக்கிவந்த மக்களது நாவை உளத்திற்கிசைய இயக்கி ஒலிக்குறியாய் எழுந்த முதன்மொழி என்பது பெறப்படுகின் றது. இப்போதுள்ள மொழிகள் பலவற்றின் சொற்கள் தமிழ்ச்சொற் களுக்கு இயைந்தனவாயிருப்பதும், செவ்வையுறாத சில மொழிகளின் சொற்களும் அமைப்பும் (தமிழ்ச்சொற்களுக்கும், தமிழின் அமைப்புக் கும்) மிகநெருங்கிய தொடர்பைக் காண்பிப்பதும், தமிழ் ஒலிகள் இயற் கை ஒலிகளுக்கேற்ப அமைந்துள்ளதும், ஒரு பொருளைக்குறிக்கும் பல

தமிழ்ச்சொற்கள் மக்களது அறிவுவளர்ச்சிக்கேற்ப ஒவ்வொருகாலத்தில் அவர்கள்கண்ட அப்பொருளினது ஒவ்வொருதன்மையைத் தனித்தேனும் பலவற்றைக் கூட்டியேனும் குறிப்பதும் மொழி ஆராய்ச்சியாளர் யாவர்க்கும் இதனது (நமது தண்டமிழ் மொழியினது) பழமையையும் என்றும் அழியாப் புதுமையையும் பொதுமையையும் விளக்கி (அன்னாரை) மகிழ்விப்ப ஆகும்" இஃதொன்றே ஈண்டைக்கு இப்பகுதியை விளக்கப் போதியதாம்.

வளர்த்தல்.

இந்நிலையில் "'நிலம் கடலாகவும், கடல் மலையாகவும், கண்ட பழமைவாய்ந்ததும்,' 'அயலாய் உள்ளவர்களுக்கும் பொருளை விளக்கக் கூடிய இயற்கை ஒலி'களைப் பெற்றிருப்பதும், வேறு பல சிறப்புக்களையுடையதும் ஆகிய நமதுமொழி, ஏன் தாழ்ந்தநிலைமையை அடைதல்வேண்டும்?" என்று ஒருசிலர் குறிப்பாக வினவலாம். அங்ஙனம் வினவப்படின் அவர்க்கு "இத்தகைய பழமையும் மேன்மையும் வாய்ந்த ஒருமொழி தனது இயற்கையான உயர்ந்தநிலைமையிலிருந்து தற்பொழுது தாழ்ந்தநிலைமைக்கு வந்திருப்பது வியப்பே! எனினும், அஃது உலகத்தியற்கை; அன்றியும், அது (நமது மொழி) சில நூற்றாண்டுகளாக—ஏன், பல நூற்றாண்டுகளென்றே சொல்லப்படலாம்—காலவேறுபாட்டாலும், அரசுமாற்றம் முதலிய பல மாறுபாடுகளாலும் இத்தகைய நிலைமைக்கு வந்துளது; அதனால், அக்குறையை நமது மொழியின்மேல் ஏற்றமுடியாது; ஆனால், அது இத்துணைக்காலம் காப்பார் அற்று இருந்தும் இன்னும் உயிருள்ள, உலகவழக்கிலுள்ள, பேசுமொழியாக இருப்பதே அதன் மிக உயரிய மேன்மையினை வலியுறுத்துவதாகும்" எனக்கூறலாம். நிற்க, பிணத்துக்கு அலங்காரம் பண்ணுவதுபோல் எவரும் தமது பழையபெருமையைச் சொல்லிக் கொள்வதால் அன்னார்க்கு வரக்கூடிய நன்மை ஏதும் இன்று; அஃது அறிவுடையோரது பெருநகைப்புக்கே இடனாகும்; அன்றியும், அது, மடியாளர்செய்கையுமாம். ஆதலின், நாம் நமதுமொழியை எங்ஙனம் வளர்த்தல் வேண்டும் என்பதை ஆராய்ந்து இனிது பயன்பெறும்வரையில் அத்துறையில் இடைவிடாது ஊக்கத்துடன் முயலவேண்டுவதே நமது முதற்கடமையாகும். ஒருவர் ஒன்றனை வளர்க்க முன்வந்தால் அன்னார் முதலில் அதன்கண்ணுள்ளகுறைபாட்டைத்தெரிந்துகொள்ளல்

வேண்டும். குறை—இன்றியமையாமை. இம்முறையில் அடுத்தபடியாகக் கூறவேண்டியது நமது மொழியின் இன்றியமையாமைக்குத் தடையாக இருக்கும் குறைபாடுகளையே. முற்கூறியாங்குக் காலவேறுபாடு முதலிய வற்றால் நமது தற்கால உலகவாழ்க்கைக்கு வேண்டுவன முன்னினும் பலவாகப் பெருகிவிட்டன. அவை 'இவை இவை' என்பதைத் தெரிந்து கொள்வதற்கும், அவற்றை அடைவதற்கும் துணைபுரிவனவாகப் பல கருத்துக்களையும், வழிகளையும் நாம் பிறமொழிகளிலுள்ள நூல்களால் அறிந்துகொள்ளவேண்டிய நிலைமையிலிருக்கின்றோம் நம்முடைய பண்டைச் சரிதங்களே இன்னும் நம்மால் வரன்முறையாக எழுதப்பட வில்லை. இஃது ஒரு மறுக்கமுடியாத பெருங்குறையல்லவா? இங்கு எடுத்துக்காட்டாகத் "தமிழ்நாட்டுத்தெற்கெல்லையாகப் பண்டைச் சான்றோர் பலரும் குறித்துச்செல்லும் குமரிக்குத் தெற்கே நாற்பத்தொன்பது தமிழ்நாடுகள் இருந்தன என்று ஒரு சாராரும், இருந்ததில்லை யெனப் பிறிதொரு சாராரும் கூறுவனவற்றையும்; முச்சங்கங்கள் இருந்தன என்று ஒரு சாராரும், அங்ஙனமன்று சங்கம் ஒன்றே விட்டு விட்டுத் தொடர்ந்துவந்தது என்று பிறிதொரு சாராரும் கூறுவன வற்றையும்; தமிழ்மொழிமாட்டுச் சிறப்பாகப் பயின்றுவரும் அகம், புறம் என்பன தனித்தமிழ்வழக்கேயன்றி ஆரியர் வழக்காகிய அறம் பொருள் இன்பம் வீடு என்ற நாற்பெரும்பேறுகளைப்பற்றிய வழக்கன்று என்று ஒரு சாராரும், அவ்வழக்குப்பற்றியவே என்று பிறிதொருசாராரும் கூறுவனவற்றையும்; இங்ஙனமே, திருக்குறள்போன்ற நீதிநூல்கள் அகம், புறம் என்ற தமிழ்வழக்குப்பற்றி எழுந்தன என்று ஒரு சாராரும், அறம் பொருள் இன்பம், வீடு என்ற ஆரியர் வழக்குப்பற்றி எழுந்தன என்று பிறிதொருசாராரும் கூறுவன வற்றையும்; இவைபோன்ற பிற பலவற்றையும் ஆராய்ந்து உண்மை காணவேண்டுவது தண்டமிழ்ச்சரித வளர்ச்சிக்கு இன்றியமையாதன எனக்கூறலாம். சின்னாட்களாக ஆங்காங்குச் சிற்சில அறிஞர்கள் இத் துறையில் இறங்கி நாட்டிற்கும், மொழிக்கும் நன்மையைச் செய்துவருவது நம்மனோரால் பெரிதும் போற்றத்தக்கதே. எனினும், நமது சிறார்களும் உலகியல்களை நன்கு எளிதில் உணர்ந்துகொள்ளத்தக்கவகையில் உலகநூல், உயிர்நூல், உடல்நூல், செல்வநூல், நிலநூல், ஒளி நூல், ஒலிநூல், வானநூல், அறிவுநூல்போன்றசுபற்பல நூல்கள்

பலப்பல மொழிகளினின்றும் நமது மொழியில் இன்னும் மொழிபெயர்க்கப்படவேண்டாமா? வடமொழியிலுள்ள ‘சப்தகல்பத்ருமம்’ ‘வாசஸ்பத்யம்’ போன்றனவும், ஆங்கிலத்திலுள்ள ‘என்ஸைக்ளோபீடியா பிரிட்டானிகா’ ‘வெப்ஸ்டர்ஸ்’ போன்றனவும் ஆகிய ஒருபோகராதி நமது தாய்மொழியாம் தண்டமிழ்மொழியில் இருக்கவேண்டியது இன்றியமையாததொன்றல்லவா? ஆங்கிலம்போன்ற பிறமொழிகளில் அவ்வம் மொழியாளர்கள், தத்தம்மொழியில் வல்லுநராயிருந்த ஷேக்ஸ்பியர் (இவர் வங்கதேசத்தறிஞர்களில் ஒருவர் எனச் சிலரால் கருதப்படுகின்றனர்) போன்ற மகாகவிகள் இயற்றிய நூல்களைப் புத்தகசாலைப் பதிப்பு என்றும், சாதாரணப்பதிப்பு எனவும் வெளியிட்டுப் பார்ப்போர்களுடைய கண்களைக் கவருமாறும், எவர்க்கும் எளிதிற் கிடைக்குமாறும் செய்கின்றார்களே. அத்தகைய நிலைமை நமது பண்டைச்சான்றோர்கள் இயற்றியருளிய தண்டமிழின் மேலாம் தரங்களாகிய பெறலரும் நூல்களுக்கு உண்டாதல் வேண்டாமா? உயர்ந்தகருத்துக்கள் நிறைந்தனவாய், எவரையும் எளிதில் அறிவுறுத்தத்தக்கனவாய், நாடோடியாகத் திரியும் பிச்சைக்காரர்களிடமே தங்கி உருமாறியிருப்பனவாய் உள்ள பலபாக்களும் பழமொழிகளும் தத்தம் முன்னை உருவங்களுடன் வெளிப்படுத்தப்படுதல் வேண்டாமா? அங்ஙனமே, இன்னும் நவநாகரிகம் தலைகாட்டாதசிற்றூர்களிலுள்ள பெண்பாலர்களிடத்திலும் சிறார்களிடத்திலும் தங்கியிருக்கின்ற தாலாட்டு விளையாட்டு முதலியனபோன்ற பாடல்கள் வெளிப்படுத்தப்படல்வேண்டாமா? வியவசாயத்தைப்பற்றியும், கைத்தொழிலைப்பற்றியும், வியாபாரத்தைப்பற்றியும் நமது மொழியில் எத்தனை நூல்கள் இருக்கின்றன? சிற்பம், கணிதம் போன்ற கலைகளிலே பெரிதும் கவனஞ்செலுத்த விரும்புவோர்க்குத் துணைசெய்யத்தக்க நூல்கள் நமதுமொழியில் இருக்கின்றனவா? அரசியலைப்பற்றிய நூல்கள் போதிய அளவு நமதுமொழிக்கு வேண்டுவதின்றா? இவற்றால் நமது மொழியை முன்னர்ப் புகழ்பவன்போற்காட்டிப் பின்னர்ப் பழிக்கவந்தவனாக என்னை நீங்கள் கருதிவிடலாகாது. மேற்காட்டிய குறைகளைப்போக்கத்தக்கனவாக ஆங்காங்குச் சிற்சிலநூல்கள் வெளிவந்தும், வெளிவந்துகொண்டும் இருப்பதை நன்றாய் அறிவேன். என்றாலும், அவை, நமது நாட்டின் பரப்பையும், நமதுமொழியினைப் பேசுவோரது பெருக்கையும் நோக்கச்சிறிதும்போதாதன என்பதே எனது கருத்து. இதுபற்றித்தான்

அவற்றைக் குறை எனக் கூறியதும். ஆயினும், இக்குறையையும் நமது மொழிமாட்டு ஏற்றமுடியவில்லை. எங்ஙனமெனில், எந்தநாட்டிலும், எந்தக்காலத்திலும், எந்தமொழியிலும் காலத்திற்கேற்ற பலசிறப்பட்ட புதுப்புதுக்கருத்துக்கள் அடங்கிய நூல்கள் தாமாகவே தோன்றின என்று யாண்டும் கேட்கப்படவில்லை. அங்ஙனம் தோன்றவும் முடியாது. ஆனால், அவை பல தக்க அறிஞர்களால் அவ்வப்பொழுது புதிதுபுதி தாக எழுதப்பெற்றே நாளடைவில் வளர்ந்து உயர்நிலையைப் பெற்றுவரு கின்றன என்க. இவற்றால், நமதுமொழி பலதுறைகளிலும் வளர்க்கப் படவேண்டிய நிலைமையிலேயே இருக்கின்றது என்பதும், வளர்த்தல் இன்றியமையாததொன்றும் என்பதும் பெறப்படுகின்றன.

எவர் எவர், எவை எவை, எப்படி எப்படி நமது மொழியை வளர்த்து வரல் வேண்டும் என்பதே இனிக் குறிப்பிடப்படல்வேண்டும்.

க. மக்கள்.

நமது தமிழ்மொழியைத் தாய்மொழியாகப் பெற்றவர்கள் சற்றே றக்குறைய இருகோடியினர் ஆவார்கள் என்பது முன்னர்க்கூறப்பட்டது. இன்னணம் இருந்தும், நமதுமொழி வளரவேண்டிய நிலைமையில் இருக் கின்றது. என்செய்வது ? இனியேனும், 'அவர்கள் பொதுவாக ஒவ் வொருவரும், சிறப்பாக உயர்தரப்படிப்பைப் படித்துப் பட்டம்பெற்ற வர்களும்—தாம் தாம் தமது மொழியாளராகிய பிற உடன்பிறப்பாள ருடன் பேசும்பொதெல்லாம் தடுக்கமுடியாத நிலைமை உண்டானாலன்றி எக்காரணம்கொண்டும் தாய்மொழியாலன்றிப் பிறமொழிகளாற் பேசிக் கொள்ளுதல் கூடாது' என்ற உறுதிப்பாடு உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்; இந்த அன்னார், "ஆங்கிலப் பார்லிமெண்டு சபையிலே இந்தியா உதவி மந்திரியாராயிருந்த கனம் ஸிங்ஹாப்பிரபு அவர்களும், இந்தியா மந்திரி சபையிலே ஓர் உறுப்பினராயிருக்கும் கனம் பூபேந்திரநாதவஸு அவர்களும் லண்டன்மாநகரத்திலும் தாங்கள் தனித்துப் பேசிக்கொள்வ தாயின் ஆங்கிலமொழியிற் பேசிக்கொள்ளாது தங்களது தாய்மொழி யிலேதான் பேசிக்கொள்வார்கள்" என்று கேட்கப்படுவதை ஊன்றியறி தல் பொருத்தமானது. அன்றியும், அவர்கள், தமது தாய்மொழியை அறிந்தவர்களிடத்தில் அதை விடுத்துப் பிறமொழிகளாற் பேசுவதைப் பாவச்செயலாகவும் கருதல்வேண்டும்; மேலும், ஆண்டாண்டுள்ளமொழிப்

பற்றுடையார் அனைவரும் முன்னர்த் தாங்கள் நடந்துகாட்டிப் பிறரை யும் அங்ஙனமே நடந்துகொள்ளுமாறு திருத்திவரல்வேண்டும்; "இச் சபையில் எனது தாய்மொழியாகிய தமிழிலே என்னால் பேசமுடியா மைக்கும், தெரியாமைக்கும் நான் வருந்துகிறேன்" என்று அதனையும் வேற்றுமொழியாற் கூறுவதைப் பெருமையாக நினைப்பது தவறு என் பதையும், அது வெட்ககரமானது என்பதையும் உணரல்வேண்டும்; பிரசங்கம் செய்பவர் தாம்செய்யும் பிரசங்கத்தைக்கேட்பவர்கள் எந்த மொழியை இயல்பில் அறிந்திருக்கின்றார்களோ அந்த மொழியிலேயே பிரசங்கம் செய்தால்தான் அந்தப்பிரசங்கம் குறித்த பயனை அளிக்கும்' என்பதை அவர்க்கு வற்புறுத்திக் கூறவேண்டியதில்லை. இங்கு, அவர், "முன்னர்த் தமது தாய்மொழி (வங்காளமொழி)யிலே செய்யுளை இயற்றி அதைத்தான் பின்னர்த் தம்மால் ஆங்கிலத்தில்மொழிபெயர்க்கமுடியும்" என்று நமது (இந்தியக்) கவியரசர் ரவீந்திரநாத்தாகோர் கூறுவதன் உட்கருத்தை உற்றுநோக்கற்பாலர். இன்னும், அன்னார், ஒருநாடு ஒற் றுமையுற்று முன்னேறும்வண்ணம் துணைபுரிவதற்கு அந்நாட்டுமொழி யின்வளர்ச்சியே பெரிதும் இன்றியமையாததொன்றாம் என்பதனையும் தமதுகருத்திற் பதியவைத்துக் கோடல்வேண்டும். இதற்கு மேற்கோ ளாக "ஒருநாடு முன்னேறவேண்டுமாயின், உதிரம் உடல்முழுவதும் ஓடிப்பாவுதல்போல், அந்நாட்டுப்பெரியோர்களின்கருத்துக்கள், அந்த நாட்டு மக்கட்பரப்புமுழுவதும் ஓடிப் பரவுதல்வேண்டும். ஆனால், அவை, அவரவர்கள் தாய்மொழித்துணையாலேதான் அங்ஙனம் ஓடிப்பரவ முடி யும்" என டாக்டர் பி. ஜே. மேதா அவர்கள் கூறுவது நம்மனோரால் ஊன்றி அறியத்தக்கதாம். இவற்றால், தமிழராவார் ஒவ்வொருவரும் 'தன் கையே தனக்கு உதவி' என்ற உறுதியுரையை உணர்ந்து தத்தம் உரை செல்லுமிடங்களிலெல்லாம் நமதுமொழியின்வளர்ச்சிக்கு இன்றி யமையாத பலதுறைகளிலும் முயன்றுவரல்வேண்டும் என்பதும், 'அவர் செய்யவேண்டும், இவர்செய்யவேண்டும்' என்று வாய்ப்பேச்சுப்பேசிக் கொண்டு வாளா நாள்கழித்தல் கூடாது என்பதும் பெறப்படுகின்றன. இங்கே, தாய்மொழியை வளர்க்கவேண்டியதன் இன்றியமையாமையை வற்புறுத்துங்கால் "மத்திய ஐரோப்பாவிலும் கீழ் ஐரோப்பாவிலுமுள்ள யூதர்கள் தங்களுக்குள் ஒரேபாஷை உபயோகிக்கப்படவேண்டும் என்ற கருத்துடன் தாங்கள் பேசும் ஆபாச இட்டிஷ்பாஷையை ஒரு நாகரிக

பாஷையாய்ச்செய்து அதில் உலகத்திலிருக்கும் உத்தமமான கிரந்தங்களை எல்லாம் மொழிபெயர்த்திருக்கிறார்கள். அவர்களாற்கூட அன்னியபாஷைகளின் மூலமாய்த் தங்கள்மனோபாவங்களைத் திருப்திசெய்து கொள்ளமுடியவில்லை. தவிர, அந்த ஜாதியில் படித்திருந்த சிலர், எல்லா ஜனங்களும் அன்னியபாஷையைக்கற்று அதன்மூலமாய் அறிவைப்பெறவேண்டுமென்று நினைக்கவில்லை; ஆகையால், அவர்கள், எல்லாராலும் ஆபாசபாஷைஎன்று கருதப்பட்ட தங்களது தாய்ப்பாஷையை நிரம்பவும் கஷ்டப்பட்டுச் சீர்ப்படுத்தி, சிரேஷ்டமான நூல்களையெல்லாம் அதில் மொழிபெயர்த்து அதைக் கௌரவப்படுத்தியிருக்கிறார்கள். இது மிகவும் ஆச்சரியமான காரியம். இந்த ஒருதலைமுறையிலேயே இந்தப்பாஷை மிகவும் உன்னதநிலைமைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இப்பாஷை வெப்ஸ்டர்ஸ் அகராதியில் 'யூதர்களால் உபயோகப்படுத்தப்படும் ஓர் ஆபாஸ கலப்பிடபாஷை' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இப்பொழுது இந்தப் பாஷையானது இப்படித் தூஷிக்கப்பட்டால் ஐரோப்பாவில் இருக்கும் யூதர்களுக்குக் கோபம் உண்டாகும். இந்த யூதபண்டிதர்கள் ஒரு தலைமுறைக்குள் தங்களது ஆபாச பாஷையை உன்னதநிலைமைக்குக் கொண்டுவந்திருக்கும்பொழுது, நம்முடைய நாகரிகமடைந்த தேசபாஷைகளைச் சிறப்பிப்பது மிகவும் சுலபமான காரியம். தென்னாப்பிரிக்காவிலும் இதேமாதிரி நடந்திருக்கிறது." என்று மகாத்மா காந்தி அடிகள் கூறியிருப்பது நம்மனோர்க்கு நமது மொழியை வளர்க்கத்தக்க போதிய ஊக்கத்தை அளிக்கும் என நம்புகின்றேன்.

உ. நமது புலவர்கள்.

இத்திருக்கூட்டத்தார் நமது தாய்மொழியைப்பற்றிச் சிறப்பித்து 'இஃது ஓர் உயர்தனிச்செம்மொழியாம். இதில் எல்லா வளங்களும் நிறைந்துள்ளன' என்று கூறிக்கொண்டு காலத்திற்கேற்றவாறு வேண்டும் பலவற்றைச் சேர்த்துக்கோடற்கு முட்டுக்கட்டைகளாக இருந்து வருதல் கூடாது. சொற்களைப்புதுவதாகப் படைத்துக்கொள்வதற்கு ஆசிரியர் தொல்காப்பியனார் ஆணை தந்துள்ளார் என்பதை இவர்கள் அறிந்தே இருப்பார்கள் என்பது ஒருதலை. ஆதலின் அன்னார், நமது தண்டமிழை உலகவழக்கழிந்த, உயிரற்ற சில உயர்தனிச்செம்மொழிகளோடு ஒப்பிட்டுப் பெருமைப்படுத்த முயலலாகாது. ஆனால், அன்னார்

நமது தாய்மொழியாம் தண்டமிழை உலகவழக்கிலுள்ள, உயிர்த்திருக்கும் உயர்தனிச்செம்மொழி என்றுகூறிச் சிறப்பிக்க முயலல் வேண்டும்.

௩. கழகங்கள்.

இவை, ஆண்டிற்கொருமுறை கூட்டங்கூடிச் சில நூறு வெண்பொற்காசுகளைச் செலவுசெய்து ஆடம்பரத்துடன் பலர் ஒன்றுகூடிச் சிலர் சிலவற்றைப்பற்றிப் பேசிக் கலைவதாற் சிறிதும் பயன் விளைந்துவிடாது. ஆனால், அவை, அங்ஙனஞ்செய்தமட்டில் தங்களது கடமையை நிறைவேற்றியதாகக் கருதிவிடாது அதனினும் மேலாக மொழியின் வளர்ச்சிக்கெனப் பல துண்டுப் பிரசுரங்களை ஏராளமாய்வெளியிட்டு எவர்க்கும் இலவசத்தில் எளிதிற்கிட்டுமாறு செய்துவரல்; என்றும் நின்று நிலவக்கூடிய தகுதியினையுடையதும், சமயப்பகுதி கல்விப் பகுதி சரிதப்பகுதி, செல்வப்பகுதி உழவுப்பகுதி, கைத்தொழிற்பகுதி, வியாபாரப்பகுதி, அரசியற்பகுதி ஆதிய பல பகுதிகளையுடையதுமான சில மாதாந்தச் செந்தமிழ்ப்பத்திரிகைகளைத் தக்கஆராய்ச்சியாளர்களைக் கொண்டு எழுதுவித்து வெளியிட்டுவரல்; எளிய இனிய நடையிலுள்ள பல சிறந்த உரை நூல்களை வெளியிடல் ஆதியவற்றையும் மேற்போட்டுக் கொள்ளல்வேண்டும். அன்றியும், அவை, பொருள்வருவாய் ஒன்றனையே குறிக்கொண்டு இவையிற்றைமேற்போட்டுக்கொள்ளலாகாது. தமிழ்மக்களது அறிவுவளர்ச்சி ஒன்றனையே குறிக்கொண்டு மேற்போட்டுக்கொள்ளல் வேண்டும் இத்தகைய அரியசெயல்களை மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரும், சென்னைத் தமிழர்கல்விச்சங்கத்தாரும் மேற்போட்டுக்கொண்டு செய்ய முன்வரலாம். இம்முறையில் உழைக்கத் தக்கவேறு பல கழகங்களும்உள. அவை அங்ஙனம் செய்ய முன்வருதல்மாத்திரம் போதியதாகாது. தமிழர்களும் அவற்றைப் பெரிதும் போற்றிவளர்த்து வாங்கிப்படித்துப் பயன்பெற முந்துறல்வேண்டும். இங்ஙனம், பலர் படித்தறிந்துகொள்ள முன் வருவாராயின், அத்தகைய ஆராய்ச்சிநிறைந்த இன்றியமையாத பல பத்திரிகைகளும், நூல்களும் வெளிவருவதும் இயலாததொரு காரியமன்று. " தமிழ்மொழிமாட்டுப் பேரன்பு உண்டு என விருதுபேசிக் கொண்டு இருப்புக்கடலையைப்போலக் கடினமான நடையிற் சிலவற்றை எழுதி இயற்கைக்கு மாறுக நடக்காமலும் இருக்கவேண்டும். சுற்றுப்பக்கங்களிலுள்ள ஊர்களுக்கு உறுப்பினர்களை அனுப்பி மொழியின் உயர்வையும், அதன் இன்றியமையாமையையும் விரித்துக்கூறுவித்தும், ஆங்

காங்குக் கிளைக்கழகங்களை நிலையிடுவித்தும் வளர்த்துவர முயலல்வேண்டும். தாம் பேசுவது இன்னமொழியென்பதைக்கூட அறியாத பல தமிழ்மக்கள் இன்னும் நமது தமிழ்நாட்டில் பத்தாயிரக்கணக்கில் இருக்கின்றார்கள் என்பதைத் தாழ்மையுடன் கழகங்களை நடத்துவோர்க்கு நினைப்பூட்டுகின்றேன்.

௪. ஸ்தலசுயஆட்சிஸ்தாபனங்கள்.

நமது தமிழ்மொழியைத் தாய்மொழியாகக்கொண்ட ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபனங்கள் நமதுநாட்டிற் பல இருக்கின்றன. அவை அனைத்தும் முதலில் தங்களுடைய கடிதப்போக்குவரத்துக்களையும், ஏனைய நடவடிக்கைகளையும் நமது தாய்மொழியிலேயே செய்துவரல் வேண்டும். அன்றியும், அவை தத்தம் அதிகாரஎல்லைக்குட்பட்ட ஊர்களிலுள்ள எல்லாச் சிறுவர் சிறுமியர்களுக்கும் தாய்மொழியைப் பயிற்றுவிக்கத்தக்க பள்ளிக்கூடங்களைப் போதிய அளவு வைத்து நடத்திவருவதோடு பிறரால் நடத்தப்படும் அத்தகைய பள்ளிக்கூடங்களுக்கும் பொருள்முட்டுப்பாடு உண்டாகாமற் போதிய அளவு பொருளுதவிசெய்தும் வரல்வேண்டும். நிற்க, அத்தகைய பள்ளிக்கூடங்களை நிலையிட்டும் ஆதரித்தும் வருவதால்மாத்திரம் அவை தமது கடமையை நிறைவேற்றியன ஆகா. போதிய அளவு பிரசாரவேலைசெய்து பொதுஜனங்களைப் படித்துப் பலன்பெறுமாறு தூண்டுவதும் அவற்றின் கடமையாகும். ஏனெனில், அவற்றின் வருவாய் அனைத்தும் தமிழ்மக்களிடமிருந்தே பெறப்படுகின்றன. அன்றியும், அவற்றைநடத்துவோர் அடையும் பெருமை அனைத்தும் அவர்களைத் தங்களுடைய பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுத்த தமிழ்மக்களாலேயே தரப்படுகின்றன ஆதலின் என்க.

௫. துரைத்தனம்.

நமதுமொழியை வளர்த்தற்குற்ற உரிமையையும் கடமையையும், போதிய ஆற்றலையும் பெற்றிருப்பன சென்னை, இலங்கை ஆகிய இரண்டு துரைத்தனங்களும்; பெரும்பாலும் துரைத்தனத்தாலேயே நடத்தப்பெற்றுவரும் சென்னைச் சர்வகலாசாலையுமேயாம். இவை, தமது கடமையை உணர்ந்து நமதுமொழியை வளர்க்க முன்வருமாயின், அவற்றிற்கும் அத்துறையில் அதிகத்தொல்லைகள் உண்டாகமாட்டா; நமது வேண்டுகோளும் இனிது நிறைவேற்றப்படலாம். அவை, முதலில்

தம்முடைய அதிகார எல்லைக்குட்பட்ட எல்லாநடவடிக்கைகளையும் நமது தாய்மொழியாம் தண்டமிழ்மொழியிலேயே செய்துவரல்வேண்டும். இங்குத் தாங்கள் செய்யவேண்டிய அனைத்தும்,—வேண்டுகோள்களோ, கட்டளைகளோ, அறிவிப்புக்களோ,—தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட மக்களிடத்திலே தான் என்பதையும், தங்களால் காக்கப்பட வேண்டியவர்களும், கற்பிக்கப்படவேண்டியவர்களும் தமிழர்களே என்பதையும், தங்களுக்கு வரும் பொருள்கள் அனைத்தும் தமிழர்கள் அரிதிலே தேடிக்கொடுப்பனவே என்பதையும், தாங்கள் செய்யும் அதிகாரமும், அடையும் பெருமையும் தங்களைப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்த தமிழர்களாலேயே தங்களுக்குக் கிடைத்தன என்பதையும் அவற்றை நடத்துவோர்க்கு நினைப்பூட்ட வேண்டியதில்லை. இங்ஙனம் நடைபெறுதற்குத் தாய்மொழியைப் பயிலாது படித்துப் பட்டம்பெற்றுப் பட்டதாரிகள் எனப் பலரும் வெளிவரக்கூடியதாக இருக்கும் தற்காலக் கல்விமுறை முதலில் அடியோடு மாற்றப்படல்வேண்டும். உலகத்தில் நமது நாடு (இந்தியா) ஒன்றுதான் தாய்மொழியைப் பயிலாமல் பட்டதாரிகள் வெளிவரக்கூடிய நிலைமையில் உள்ள நாடாகும். இது பெரிதும் வருந்தத்தக்கதே. இத்தகைய இழிந்தநிலைமை எவ்வளவு விரைவில் நீக்கப்படுகின்றதோ அவ்வளவு விரைவில் நமதுமொழியும், நாடும் முன்னேறும் என்பது தவறாகாது. இக்கருத்தே பல சான்றோர்க்கும் உடன்பாடாம். இம்மட்டோ தற்காலமுறைமை? தாய்மொழிக்கு முதல் இடம் கொடுக்காததோடு தாய்மொழியைக் கற்றவர்களும் இழிந்தவர்களாகக் கருதப்படுகின்றார்கள். அந்தோ! வெட்கம்!! வெட்கம்!!! ஆகலின், உடனே, தற்காலக்கல்விமுறையைமாற்றித் 'தாய்மொழியைப் பயிலாது பட்டதாரிகளாக இனி எவரும் வெளிவரமுடியாது' என்ற கண்டிப்பான கட்டளையைச்செய்து கைக்கொள்ளல்வேண்டும். அன்றியும், எங்கெங்கே தாய்மொழியை வளர்த்தற்குப் பாடுபடப் பொதுஜனங்கள் முன்னுக்கு வருகின்றார்களோ அங்கங்கெல்லாம் தங்களுடைய உத்தியோகஸ்தர்களை அனுப்பி அவர்களுக்கு ஊக்கமளித்துவர முயலுவதுடன் அவர்களது முயற்சிக்குப் போதியஅளவு பொருளுதவிசெய்தும் வரல்வேண்டும். அதிகம் சொல்லுவானேன். முன்னே கூறியுள்ளவண்ணம் எல்லா முயற்சிகளுக்கும் வெளிப்படையாக முன்வந்து அவற்றிற்குத் தக்கவாறு போதிய அளவு எல்லாத் துறைகளிலும் உதவிசெய்து

வளர்த்துவரல் வேண்டும். மேலும், அவை 'எத்தகைய அரிய உயரிய பிறமொழிக்கருத்துக்களேயும் தங்களுடைய குடிகளாகிய பொதுஜனங்கள் தடையின்றித் தங்கள்தங்கள் தாய்மொழியால் விரித்துவிளக்கி உரைத்துக்கொள்ளும் தகுதியினையும், அறிவினையும், ஆற்றலினையும் பெற்றிருக்கின்றார்கள்' என்று பெருமைபேசிக்கொள்ளத்தக்க நிலைமை உண்டாவதே மிக மேலான ஆட்சியின் அறிகுறி என்பதையும் அறிந்துகொள்ளல்வேண்டும். இதுபற்றி எழுதிக்கொண்டே போகலாம். எனினும், அங்ஙனம் எழுத முன்வரவில்லை. ஆனால், 'ஒருநாட்டின் அறிவு வளர்ச்சிக்கும், சமயவளர்ச்சிக்கும், ஆட்சிமுதலிய பிறவற்றின் வளர்ச்சிக்கும் துணைசெய்வதற்கு அந்நாட்டினர் ஒவ்வொருவரும் "முதலில் தத்தம் தாய்மொழியையும் இரண்டாவதாகத் தத்தம் சமயச்சார்பான உயர்வையும் அறிவையும் வளர்க்கத்தக்க கருத்துக்கள்நிறைந்த மொழியையும், பின்னர் ஆட்சியாளரின்மொழியையும் கற்றல்வேண்டும்', என்று பல பெரியோர்களும் கூறுவது நம்மனோரால் உய்த்துணரத்தக்கது'என எடுத்துக்கூறாமலிருக்கமுடியவில்லை. இக்கருத்துப்பட முன்னம் ஒருகால் மாட்சிமிக்க பரோடா அரசர் அவர்கள் கூறியதும் நினைவிற்கு வருகின்றது. இம்மூன்றும் ஒரேமொழியில் அமைந்துள்ள நாடுகளும் இருக்கின்றன. அத்தகைய நாடுதான் விரைவில் முன்னேறக்கூடியது. நமதுநாடும் ஒருகால் அத்தகைய மேலான நிலைமையில் இருந்ததே. நமது தாய்மொழியும் அம்மூன்றையும் ஒருசேரக்கொண்டுள்ளதே. என் செய்வது! தற்பொழுது சிறிதும் ஆற்றலற்றிருக்கின்றோம்! எனினும், இத்தகைய நிலைமை எந்நாட்டிலும், எப்பொழுதும் நிலைத்திருக்கமுடியாதாதலின் நமது மொழியும் விரைவில் வளர்ச்சிபெறும் என்பது ஒருதலை.

கூ. போது.

இந்நிலையில், ஒரு சாரார் பிறமொழிகளிலுள்ள எல்லாக் கருத்துக்களையும் எளிதில் அறிவிக்கத்தக்க ஆற்றலுள்ள சொற்கள் தமிழ் மொழியில் இல்லை என்றும், பிறிதொருசாரார் பிறமொழிகளிலுள்ள எத்தகைய கருத்துக்களுக்கும் தமிழ்மொழியிற் சொற்களைப் படைத்துக்கொள்ளலாம் என்றும், வேறொரு சாரார் பிறமொழிகளிலுள்ள கருத்துக்கள் கலக்கப்படவேண்டுமாயின் அக்கருத்துக்களை அறிவிக்கும் அந்த அந்தப் பிறமொழிச் சொற்களை அப்படி அப்படியே நமது

எழுத்துக்களால் எழுதிச்சேர்த்துக்கொள்ளலாம் என்றும், மற்றும் பலர் வேறு பலமாதிரியாகவும் மொழிபெயர்த்தலைப்பற்றிய கருத்துக்களை ஆங்காங்கு வெளியிட்டுள்ளார்; வெளியிட்டும் வருகின்றனர். இது பற்றி ஒருவகை முடிவு விரைவில் ஏற்பட்டே தீரும். அஃது எங்ஙனமாயினும் ஆகுக. எங்ஙனம் ஓடுகின்ற யாற்றுநீர் தன்னொடு கலக்கும் பிறவேற்றுநீர்களைத் தடையின்றிச் சேர்த்துக்கொண்டு அவற்றைத் தன்னிறமேயாக்கிச் சிறிதும் தன்னியல்பினின்றும் வழுவாது பின்னரும் ஒழுகுகின்றதோ அங்ஙனமேதான் நமது தாய்மொழியாம் தண்டமிழும். எங்ஙனமெனில், நமது தமிழ்மொழி ஓடுகின்ற யாற்றுநீர் போலப் பேச்சு வழக்கில் உள்ள மொழிகளுள் ஒன்றாயுள்ளது. இது முன்னரும் கூறப்பட்டது. ஆதலின், இதனுள் வேற்றுநீர்களைப் போன்ற பிறமொழிக் கருத்துக்கள் வந்துசேருவது இயல்பே. சேர வேண்டும் என்பதுதான் நமது விருப்பமும். அதுதான் மொழியின் வளர்ச்சியைப் பெருக்க வல்லதும். இங்ஙனமேதான் பிற பேச்சுவழக்கிலுள்ள மொழிகளும் வளர்ந்துவருகின்றன. இதற்கு உதாரணமாக ஆங்கிலம், ஜப்பான், வங்கம், ஆந்திரம் முதலிய நாட்டுமொழிகளைக் கூறலாம்.

இனி, நமது மொழி இத்தகைய மாறுதலுக்குற்ற தகுதியினைப் போதிய அளவு பெற்றிருக்கின்றது என்பதை விளக்கலும் பொருத்தமானதே. இதற்குத் தற்காலம் பல அறிஞர்களாலும் வெளியிடப்பெற்றுள்ள பலசிறப்புற்ற நூல்களையும் குறிப்பிடல் வேண்டும். அதனால் நமது தாய்மொழியாந் தண்டமிழ் காலத்திற்கேற்ற கருத்துக்களைத் தன்னகத்துக்கொள்ளும் தகுதியினைப் பெற்றிருக்கின்றது என்பதும் உறுதியுறும். எனினும், இங்கு, அவையிற்றைக் குறிப்பேனாயின்; அஃது ஒரு பெரிய அட்டவணையாக நீண்டு காலத்தை வீணாக்கும். ஆதலின், அதனைக் குறியாது விடுகிறேன்.

ஒருமொழியிலுள்ள அரியபெரிய கருத்துக்களைப் பிறிதொரு மொழியில் மொழிபெயர்த்தல் எளியதொரு வேலையன்று; அஃதொரு பொறுப்புடைய வேலையேயாம். அன்றியும், மொழிபெயர்ப்பதனால் அந்த அந்த மொழிகளுக்குள்ள இயற்கையான சிறப்புக்கள் கெடாதிருத்தலும் வேண்டும். 'ஒண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியை விரட்டிற்றும்'

என்ற பழமொழிக்கிலக்காகப் புதுக்கருத்துக்கள் நுழைந்து மொழி பெயர்ப்பு மொழியின் பழையபெருமைகளை மறைத்துவிடாதநிலைமையி லும் அமைதல் வேண்டும். மேலும், இங்ஙனம் மொழிபெயர்த்தல் முத லியசெய்தற்கோ தாம் மொழிபெயர்க்கமுயலும் மொழிகளில் வல்லுந ராகப் பலர் முன்வரல்வேண்டும். அன்னார் மிக்க பொறுமையாளராகவும், நடுநிலையாளராகவும், 'தந்நலத்திலும் நாட்டின்நலமே பெரிதாம்' என்ற கொள்கையினை உடையவராகவும், பொருள் முட்டுப்பாடு இல்லாதவராக வும் இருத்தல்வேண்டும். அன்றியும், அன்னார்க்கு உதவிபுரியப் பல மொழிகளிலும் வல்ல பல அறிவாளிகள் அடங்கிய ஒரு கழகமும், பொருளுதவி செய்யத்தக்க வசதிகளும் இருத்தல்வேண்டும்.

இங்ஙனம், தத்தம் மொழியிடத்துள்ள குறைபாட்டை உணர்ந்த மொழிப்பற்றுடையார் அனைவரும் 'என் செய்வது?' என்று எண்ணி மடிந்து வாளா இராது, அக்குறைபாட்டை "முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்" என்றபடி தமது முயற்சிக்குறைவினால்வந்தது எனக் கருதிப் பலர் ஒன்றுசேர்ந்தும், தனித்தனியாகவும் இயன்றஅளவு ஒவ் வொருதுறையிலும் "முயற்சி திருவினையாக்கும்" என்றதைக் கடைப் பிடித்து ஊக்கத்துடனும், நம்பிக்கையுடனும் உறுதியாய் உழைக்க முன்வருதல்வேண்டும். அங்ஙனம் முயன்றால் இக்குறைகள் மிக விரை வில் நீங்கிவிடலாம். இங்கே, 'தமிழின் அபிவிருத்தி' என்ற தலைப் பின்கீழ்த் 'தமிழ் வரலாறு' என்ற ஆராய்ச்சிஉரையில் அறிஞர் ஸ்ரீமான். ராவ்பகதூர் கீ. சி. ஸ்ரீநிவாஸபிள்ளை அவர்கள் எழுதியுள்ள பகுதியும், "சேணிற்பறக்கின்ற செந்தமிழ்க் குதிரைமுன்—திட்டேது தட்டேது காண்" என்ற பழைய தொடர்மொழியும் ஊன்றியறியத்தக்கனவாம்.

ஏன் வளர்த்தல்வேண்டும்,

உலகத்தில் மக்களாய்ப் பிறந்தார் எவரும் தமது நாட்டைத் தாழ்ந்த நிலைமையிற் பார்க்க உடன்படார். ஆனால், உயர்ந்த நிலைமை யிற் பார்க்கவே விரும்புவர்; அதற்கான முயற்சியையும் இயன்ற அளவு செய்வர். ஒரு நாடு தாழ்ந்த நிலைமையிலிருந்து உயர்ந்த நிலைமையை அடையவேண்டுமானால், அந்த நாட்டினரிடம் உண்மை, உறுதி, ஊக்கம், ஒற்றுமை, சமத்வம், தந்நயங்கருதாமை, சுயமதிப்பு, நடு நிலை, அஞ்சாமை, ஆண்மை முதலிய நற்குணங்கள் இருத்தல்வேண்டும்.

அத்தகைய நற்குணங்களோ எல்லோரிடத்திலும் எளிதில் வந்தடையக் கூடியன அல்ல. அவை ஆய்ந்த கல்வி, நிறைந்த கேள்வி, தக்காரது சேர்க்கை முதலியவற்றால் ஒருவருக்குண்டாகலாம். இவற்றுள்ளும் முதன்மையானது கல்வியே.

அறம் பொருள் இன்பம் வீடு என்ற நாற்பெரும் பேறுகளையும் அளிக்கவல்ல, இன்றியமையாத கல்வியோ இளமையிலேயே கற்று வளர்த்துக்கொள்ளவேண்டியதாகின்றது. இளமைப்பருவத்திற் கற்பதற்கோ தாய்மொழியேஅன்றி, பிறமொழிகள் உயர்வுடையன ஆகா. அன்றியும், அவை, தாய்மொழியால் அடையும் பயனைப்போன்ற அத்துணை சிறந்த பயனை எவர்க்கும் எளிதாகவும் விரைவாகவும் கொடா. எனவே, எத்தகைய கருத்துக்களையும் எவரும் எளிதாகவும், குறைந்த கால அளவிலும் அறிந்து கொள்ளுவதற்கு அவரவர்களது தாய்மொழியே மேலான துணை செய்வதாகும் என்பது பெறப்படுகின்றது. பல அறிஞர்களது கருத்தும், உலக அனுபவமும் இஃதேயாம். "அறிவுடையார் எல்லாம் உடையர்" என்ற தேவர்வாக்கும் ஈண்டுச் சிந்தித் துணரற்பாலது.

வளர்க்காவிடில் வரும் இழுக்கு என்னை?

'இது வரையிற் கூறியுள்ள குறைகள் நமது மொழிக்கு இழுக்கைத் தருவன அல்லவா?' என்று கேட்பதே இதற்குப் போதிய விடையை அளிக்கும் என்பது ஒரு தலை. என்றாலும், "தாய் மொழியைப் போற்றி வளர்க்காதிருப்பது ஜாதீயத்தற்கொலையாகும்" என்று மகாத்மா காந்தி அடிகள் கூறியதையும் இதற்குற்ற நல்லதொரு விடையாகக் கூறலாம்.

வளர்த்தலால் வரும் பயன் யாது?

இத்துணையும் கூறியதுகொண்டே இவ்வினாவுக்குப்பொருந்திய விடையை அறிந்துகொள்ளக்கூடும். எனினும், எடுத்துக்கொண்டதற் கேற்பச் சிலசொல்லி நிறுத்துவேன். நமதுமொழியைப்போலவே தற் காலத்திற்குவேண்டும் பலவற்றையும் தன்னகத்துக் கொள்ளாக்குறை யைப் பெற்றிருந்த வங்கமொழி தன்னுடைய அன்பர்களால் தன்னிட மிருந்த அக்குறைகளினின்றும் நீங்கி இப்பொழுது நூல்வளத்தாலும்

கருத்துநிறைவாலும், பிறவற்றாலும் குறைவுபடாத இந்தியமொழிக ளில் ஒன்றாக விளங்குகின்றது. அம்மொழிக்குரிய வங்காளிகளா கிய நமது (இந்திய) சகோதரர்களோ முன்னேற முயலும் ஒரு நாட்டின ரிடம் இருக்கவேண்டிய நற்குணங்கள் பலவற்றையும் பெற்றிருப்பதோடு கல்வி, செல்வம் என்ற இருபெரும்பேறுகளையும்பெற்று நம்மவருள் (இந்தியருள்) முதன்மையினராகத் தலைசிறந்து விளங்கிவருகின்றார்கள். அவர்களை அத்தகைய பெருமைக்கும், முதன்மைக்கும் உரியவர்களாக் கியது அவர்களது விடாமுயற்சியின்பயனால் வளர்ந்த அவர்களது தாய் மொழி (வங்கமொழி) யின் திருந்திய பெருக்கமேஅன்றிப் பிறி தன்று. இதனினும் மேம்பட்டபயன் உண்டோ? இஃதன்றோ மொழிப் பற்று! இங்ஙனம் முயன்றாலன்றோ எவரும் முன்னேறலாம். இங்ஙன மே, நமது பக்கத்திலிருந்து மிக விரைந்து முன்னேறிவரும் நமது ஆந்திரசகோதரர்களது நன்முயற்சியும், அதனால் அவர்கள் அடைந்து வரும் பெருமையும், ஜப்பான் மிகத்தாழ்ந்தநிலைமையிலிருந்து மிக விரைவில் இவ்வளவுமேலானநிலைமைக்குவந்த வரலாறும், பிறவும் நம்ம னோரால் உய்த்துணரத் தக்கனவாம்.

முடிவுரை.

அறிஞர்களே! எனது புல்லறிவிற்கெட்டியஅளவு ஏதோசில கூறி னேன். இனி, நல்லறிவுள்ள தாங்கள் "ஞாலங்கருதினுங்கைகூடுங்காலங்-கருதிஇடத்தாற்செயின்" என்ற நல்லுரையை நாடி, ஒன்றுகூடி, நன்கு ஆராய்ந்து, தக்கதுசெய்து நமது தாய்மொழியாந் தண்டமிழைக் காலத் திற்கேற்றவாறு பலதுறைகளிலும் வளர்த்துப் பெரும்புகழ் பெறுவீர்க ளாக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

ஊ. சு. வேங்கடராமையர்,
கும்பகோணம்.

ஸ்ரீ :

புரூரவசரிதை.

[௨௧-ஆம் தொகுதியின் ௫௩௮-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

கைலைப்படலம்.

உற்றனர்கள்வெள்ளிமணியோங்கலினுடுத்த
பொற்றபுரிசைச்சிகரிவாயிலிடைபுக்குப்
பெற்றிமுகனுக்கறியவோதினர்கள்பேத
மற்றவன்முன்மற்றவனுணர்த்திடவழைத்தான். (௧)

அக்கணியுமுக்கணனருக்கருதயம்போற்
செக்கர்விரிபொற்கழல்செறித்தகமலத்தின்
முக்குணமொடெக்குணமுமுற்றறிவுபெற்ற
தக்கவர்குவித்தமலர்மீக்கொடுதயங்க. (௨)

வெம்புலியதட்கருமிடற்றரவகச்சோ
டம்பரமிலங்கிடவகன்றதிருமார்பின்
பைம்பொனிதழித்தொடைபருப்பதமடந்தை
வம்பகன்முலைச்சுவடுவைத்ததைமறைப்ப. (௩)

மாகமுயரும்பவளமால்வரைமருங்கே
மேகமுறைகின்றதெனமின்னிடைமழைக்கட்
டோகையொருபாகமுறநீறொளிதுவன்ற
நாககணகங்கணவெயிற்கதிர்களுற. (௪)

சிந்துரநிறச்சசிசுடர்க்கதிர்கள்செய்தே
முந்துதயவெற்பினின்முடித்தலையிடத்தே
வந்துதயமுற்றனவனப்பினும்வனப்பா
ரைந்துவதனத்தினுமருட்சுடரெறிப்ப. (௫)

எம்பிறைவனின்னணமெழுந்தருளிவைகச்
செம்முனிகளுஞ்சுரர்களுங்குழுமல்செய்தார்
விம்மிதமடைந்தனர்மிடைந்தனரவ்வேலை
மைம்முகிலிறத்தமகதிக்கநிபன்வந்தான். (௬)

வேறு.

மாடகம்பயின்மகதியாழ்முனிவாணிதழித்
தோடலர்ந்திடும்வேணியான்பதமலர்தொழலுந்
தேடரும்பிரான்றிருமுகமலரொளிசிறப்ப
நீடுமன்புடைமுனிவனுக்கொருமொழிநிகழ்த்தும். (எ)

செவ்வியாழ்நரம்பேழிசையாற்றியசெல்வ
வெவ்வயிற்பலநாள்கழித்தனைகொனீயியங்கு
மவ்விடத்தினிலற்புதமென்னையென்றருள
நைவளத்திறனுணர்ந்தநாரதமுனிநவில்வான். (அ)

என்னையாளுடைநாயகவெழின்மணிமாடச்
சென்னிவான்றொடுந்திரிகர்த்தமென்பதோர்நகரின்
மன்னர்மன்னவன்மனையவண்மணிவயிற்றிடையே
தன்னினேரிலாதுதித்தனளொருபெருந்தனயை. (கூ)

அருமகத்தினால்வருமகடனையந்தவாசன்
மருமகற்கினிதுதவுவான்மணமுரசறைந்தே
திருநகர்க்கணிசெய்தனனவனுயிர்த்தெரிவை
யுரிமையுற்றதன்மருகனுக்குதவவென்றுணர்ந்தாள். (க0)

இருவரெண்ணியவெண்ணமுமிவையிவையிவரிற்
றெரிவைநன்மணம்பெறுபவன்யாவனோதெரிகென்
றிருண்மிடற்றிறைக்கியம்பினன்யாழ்முனியிறைவன்
விரிமலர்ப்பொகுட்டுறைமறைக்கிழவனைவினவ. (கக)

நதிதயங்கியவேணிபம்பரமனேநடுவே
யதிசயம்பெறவந்தபின்யாவருமறியும்
விதியெனும்பெருவலித்திறத்திபற்கையைவேறே
மதியினிற்றெரித்திடலரிதென்றனன்மறையோன். (கஉ)

என்றவாசகங்கூறலுமெழின்மணிமார்பின்
மன்றலாறுபூந்தாமரைமாதுசேர்வள்ள
லொன்றுகான்முகத்தொருவனேயூாவையுந்தொருத்தோ
யொன்றுகூறுதிவிதிகொலோமதிகொலோவேற்றம். (கங)

எனத்துழாய்முகிலியம்பலுஞ்சதுமுகத்திறைவன்
மனத்துளாய்வருமதியினைவலியெனமதியேல்
நினைத்துளார்வயினன்றியேபிறிதொன்றாய்நிகழ்த்தும்
வினைத்துளாய்வரும்விதிவலிப்பெருமையார்விரிப்பார். (௧௪)

அற்றமில்லெனவகிலமுஞ்சராசரமனைத்தும்
பெற்றயானுமென்விதியறிபெற்றிபெற்றிலனான்
மற்றியாரினியறிகுவார்திருமறுமார்பா
சொற்றவென்றியவ்விதிக்கலாதிலையெனச்சொன்னான். (௧௫)

பழுதியம்பினைபழுதிலாப்பழமறைப்பழையோய்
முழுதுணர்ந்தவர்விதியையுமதியினான்முனிவா
ரெழுதுகின்றவாண்டெண்ணிரண்டென்பதையொருவன்
வழுவநோற்றதுமதிவலத்தாலன்றோவென்றான். (௧௬)

உந்திபூத்தவனுந்தியினுதித்தபேரொளியோன்
சிந்தைநவேறுறவிசைத்தலும்யாழிசைச்செல்வ
னிந்துசேகரத்தெம்பிரான்றிருமுனரிசைத்த
வந்தவாறுதன்மனத்திறனுணர்த்திரென்றறைந்தான். (௧௭)

நெறித்தசெஞ்சடைநாதனிவையிவைநிகழ்த்த
வெறித்ததாமரைப்பொகுட்டுறைமறைமுதல்விடத்தை
மறித்தநோக்கினாண்மணவினையன்னவர்மனத்திற்
குறித்தமைந்தர்களிருவர்க்குமன்றெனக்குறித்தான். (௧௮)

போதுவானிவைநிகழ்த்தலுமுகினிறம்பூத்த
சீதரன்றிருவதுவைமற்றெவற்கெனச்செப்பக்
கேதமொன்றியபங்குவிச்செக்கடிக்கிடக்கு
மேதிலான்பெறுமன்னவளிளமுலையின்பம். (௧௯)

வங்கவாரிதிமகிதலத்தரசெலாநிற்கப்
பங்குவாயிபிச்செக்கடிக்கிடந்துழல்பவனுக்
கங்கையாற்றொடைபுனையுமென்றுரைத்தவற்புதத்தைச்
சங்கபாணியான்றெரிதருவனெனமனஞ்சமைந்தான். (௨௦)

என்றுநன்மணமென்றதுநாளையென்றிசைத்தா
னன்றுநன்றினிமதியணிசடைமுடிநம்பா
மன்றுநீயெனப்புகன்றனரவனடிவணங்கி
யன்றுவானவர்தத்தமதிருக்கைசென்றடைந்தார். (௨௧)

கைலைப்படலமுற்றும்.

௨. தவிப்பத்திராதிபர்.

புத்தக மதிப்புரை.

உதயனசரிதம் :—இது, மகிபாலன்பட்டி வித்வான் ஸ்ரீமத் மு. கதிரேசச்செட்டியாரவர்களால் வடமொழியினின்றும் மொழிபெயர்த்தளிக்கப்பட்டது. இதன்கண் அரசர்க்கு விளையாட்டுமேற்கொண்டு வேட்டையாடல் முதலியவற்றாலவரும் தீங்கும், அறிவிற்சிறந்த அமைச்சர்சொல்வழிநிற்றலால்வரும் நலங்களும், சிறந்த அமைச்சர்க்குரிய அரியசூழ்ச்சிமுதலிய செயல்களும், இடுக்கணுண்டாயகாலத்தும் மகளிர்க்குக் கற்பு மாசுபடலாகாதென்பதும், ஸபத்நிகள் ஒருவர்க்கொருவர் அன்போடுகூடி ஒத்துவாழ்தலும், அரசியல் ஓங்குதற்குச் செய்யற்பாலன இன்னவென்பதும், கடவுள் வழிபாட்டின் பயனும் பிறவும் புலப்படுவனவாம். இன்னும் இச்சரிதத்தின் வரலாறு முதலியனவும் பிறவும் நன்குவிளங்கும்படி யெழுதப்பட்ட செவ்வியமுகவுரையும், இப்புத்தகத்தைப்பற்றி ஸ்ரீமந் மஹாமஹோபாத்யாய வே. சாமிநாதையரவர்கள், சென்னை நியாயகலாசாலைப்போசிரியர் ஸ்ரீமத் கா. சுப்பிரமணியபிள்ளையவர்கள் (எம்., ஏ., எம்., எல்.,) ஸேதுஸமஸ்தான வித்வான் ஸ்ரீமத் ரா. இராகவையங்காரவர்கள், இவர்களெழுதிய நன்மதிப்புப்பத்திரங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. கதைபடிக்கத் தொடங்கும் சிறுவர்களும் மனங்கொள்ளற்கேற்றவாறு வாக்கியங்களைச் சிறுதொடராகவமைத்தும், செய்யுளிலும் சிறிது பயிலுமாறு இடையிடையே சில வெண்பாக்களியற்றிச்சேர்த்தும் இருப்பது பாராட்டத்தக்கது. செட்டியாரவர்கள் கல்வித்திறமையை நோக்குங்கால் இது மிகச்சிறிய காரியமாயிருப்பினும், சிறுவர்களுக்கெல்லாம் கல்வியறிவளிக்கும் சிறப்பினைநோக்குங்கால் பெரியகாரியமேயாம். இவ்வாறு செட்டியாரவர்களது வடமொழி தென்மொழிவல்லமை உலகிற்பயன்படும்படி அவர்களை யூக்கி உபகரித்துவரும் மேலைச்சிவபுரிச் சன்மார்க்கஸபையார் நன்முயற்சி பாராட்டத்தக்கது. இதன் விலை அணா 8. வேண்டுவோர் மேற்கண்ட ஸபையார்க்கெழுதிப் பெறலாம்.

இந்தியர் சரித்திரம் :—இது, திருச்சி ஸ்ரீமான் பி. டி. ஸ்ரீநிவாஸையங்கார் (எம். ஏ., எல். டி.,) அவர்களால் முதல் இரண்டு மூன்று பாகங்களாகவகுத்துச் சரித்திரநூல்வல்லார் கொள்கைகளையும், சிலா

சாசனங்களாலறியப்படுங் குறிப்புக்களையும் தழுவிக் காலக்கிரமப்படி முறைப்படுத்திப் பாலர்கள் படித்துணரும்படி தெளிவான தமிழ்நடையில் மிக விரியாமலும் சுருங்காமலும் எழுதப்பட்டிருக்கிறது. காலமென்னுங் கரையற்ற கடலிடைத் தோணிகளோடியதடங்கள்போலத் தோன்றியழிந்தசரித்திரநிகழ்ச்சிகளை ஆராய்ந்தறிந்து முறைப்படத் தொகுப்பது யார்க்கும் அரிதாமாதலால் ஒருசிறிது மாறுதலடையக் கூடுமாயினும் அது தவறுகமாட்டாது. இன்னும், இவர்கள் முன்னமே எழுதிவெளியிட்ட பல்லவர்சரித்திரமென்னும் புத்தகமொன்றும் நம் பார்வைக்கு எட்டியது. அதனால் அவர்களது அருமையான தமிழ் நூலாராய்ச்சியும் நன்குபுலப்படுகிறது. இப்புத்தகத்தை இன்னும் திருத்தமுற மறுமுறை பதிப்பிக்கக் கருதியிருப்பதும் தெரிந்துமகிழ்வடைகிறோம். இவர்களெழுதிய இப்புத்தகங்கள் மாணவர்களுக்குத் தமிழில் நல்ல வசனநடையைப் பயிற்றுவிக்கவும் வல்லனவாயுள்ளன. இந்தியர்சரித்திரம் ஒவ்வொருபாகத்திற்கும் விலை அணா 12. பல்லவர் சரித்திரம் ரூ. 1—4—0. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

சங்கசிந்தாமணி:—இது, அகநானூற்றுப் பதிப்பாசிரியரான ஸ்ரீமத். வே. இராஜகோபாலையங்காரவர்களால் பலவருடங்களாக ஆராய்ந்தறிந்த முச்சங்கங்களின் சம்பந்தமான விடயங்கள் பலவற்றையும் தொடர்ச்சியாகவெழுதி அதன் முதற்பகுதியாகவெளியிடப்பட்டது. இதில், சங்கநூற்செய்யுட்களில் ஆங்காங்குக் குறிக்கப்பட்டவிடயங்களைக் கொண்டு கோவைப்பட இடையிடையே வேண்டிந் தொடர்மொழிகளைப் பெய்து சிறுசிறு கதைவடிவமாக்கி யொவ்வொரு சரித்திரமும் எழுதப்பட்டிருக்கின்றன. இப்புத்தகம் தமிழ்நாட்டின் சரித்திரஆராய்ச்சிசெய்பவர்களுக்கு மிகவும் பயன்படத்தக்கது. உயர்தரகலாசாலைமாணவர்கள் படித்தற்குரியது. இவ்வாறே ஏனைப்பகுதிகளையும் எழுதிவெளியிடுமாறு இப்புத்தகத்தை வாங்கிப்படித்து ஐயங்காரவர்களைத் தமிழ்மக்கள் ஊக்குவாராக. இதன்விலை அணா 12, வேண்டுவோர் ஸ்ரீமத். வே. இராஜகோபாலையங்காரவர்கள், கம்பர் விலாசம், மயிலாப்பூர், சென்னை, என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்,

ஹரிஸமயதிவாகரம்:—இது, வைஷ்ணவஸமயக் கொள்கைகளை வெளியிட்டுவரும் ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகையாகப் பண்டிதர்

ஸ்ரீமத். ஆ. அரங்கராமாநுஜப்பிள்ளையவர்கள் பத்திராதிபத்தியத்தில் மதுரையினின்றும் வெளிவருகிறது. இதன் முதன்மூன்றுபகுதிகள் வெளிவந்தன. அவற்றுள், பிரமாணஸித்தமான விஷயங்களே வெளியிடப் பட்டிருக்கின்றன. இப்பத்திரிகை வைணவசமயக் கோட்பாடுகளை யறிய விரும்புமவர்களுக்கெல்லாம் மிகவும் பயன்படத்தக்கது. இதன் வருடச் சந்தா ரூபா இரண்டு. தனிப்பிரதி அணா 4. வெளிநாடுகளுக்கு ரூபா 2—8—0. வேண்டுவோர் பத்திராதிபர், ஹரிஸமயதிவாகரம், (ஸ்ரீசரண்யாபிமதவிஷ்ணுசித்தராமாநுஜஸபை) கூடலழகப்பெருமாள் ஸந்நிதிவீதி, மதுரை என்றவிலாசத்திற் பெறலாம்.

இரக்தாக்ஷிவருஷ வாக்கிய பஞ்சாங்கம்:—இது, யாழ்ப்பாணத் தைச்சார்ந்த நல்லூரிலுள்ள ஸ்ரீமத். சிவராமலிங்க ஐயரவர்களாலும், ஸ்ரீமத். ச. பஞ்சாக்ஷரஐயரவர்களாலும் நன்கு கணிக்கப்பட்டுப் பூர் வீகமுறைப்படி பஞ்சாங்கங்களிலறிவிக்கவேண்டிய விடயங்கள் பலவும் விளக்கும்படி தெளிவாயெழுதி 80 பக்கங்களடங்கிய புத்தகரூபமாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இதன்விலை அணா 5. தபாற்கூலி வேறு. வேண்டுவோர் பதிப்பித்தோர்க் கெழுதிப்பெறலாம்.

தமிழ்மொழியும் சைவசமயமும்:—இது, தேவகோட்டைச் சிவா கம சித்தாந்தபரிபாலனசங்கத்துக் காரியதரிசி திருவாளர். அழ. சுப. பழ. சுப்பிரமணியன்சேட்டியாரவர்கள், கீழைச்சிவப்பட்டி ஸ்ரீமீநாக்ஷி சுந்தரேசுவரர்கலாசாலையின் முதலாவது ஆண்டுநிறைவுவிழாவின் சங்கத் தலைமை வகித்தபொழுது நிகழ்த்திய முன்னுரை. இதில், தமிழ் மொழியின் பெருமையைப்பற்றிப் பேசத்தொடங்கி, அது, அம்மொழிப் பெயரமைப்பைப்பற்றியும், தமிழெழுத்துக்களின் ஒடுக்கைமுறைபற்றி யும் ஆராய்ச்சியாலும் கற்பனாசக்தியாலும் சைவசமயக்கொள்கைகளைத் தழுவியுள்ளதாகக்காட்டப்பட்டிருக்கிறது. இவர்களது தமிழபிமானமும் சைவசமயாபிமானமும் பாராட்டத்தக்கன. இதனைத் தேவகோட்டைச் சிவாகமசித்தாந்த பரிபாலனசங்கத்தார் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார் கள். வேண்டுவோர் அச்சங்கத்துக் கெழுதிப் பெறலாம்.

ஐக்கிய சங்கங்களின் மர்மங்கள்.

ஜனங்கள் நற்குண நற்செய்கைகளில் விருத்தியடைந்து ஒருவருக்கொருவர் நன்மை பயக்கும் நிலையில் வருவதற்கு முக்கிய ஏதுவாகிய ஐக்கிய நாணயச்சங்கங்கள் நமக்குக் கிடைத்துள்ள ஒரு பெரும்பாக்கியமே. ஐக்கிய நாணயச்சங்கம் என்னும் தொடர்மொழியின் ஒவ்வோர் பகுதியும் அரியதோர் பொருளை அடக்கியிருக்கிறது. ஐக்கியம், ஒற்றுமை, நாணயம் என்றால் திரவியம் என்றும், சொன்ன சொல் தவறாது நடத்தலென்றும் பொருள்படும் சங்கம் என்பது சேர்க்கை.

ஒற்றுமை யென்பது பலருடைய எண்ணமும், செய்கையும், பேச்சும் ஒரு முக்கிய நோக்கத்தைக் குறித்துள்ளதென்பதைக் காட்டும் சொல்; எவ்விடத்தில் அல்லது எவர்களுக்குள் பிறரிடத்தில் அன்பு, தயை, ஜீவகாருண்யம் முதலிய சற்குணங்களுண்டோ அங்குதான் ஒற்றுமை காணப்படும். எவர்களுக்குள் துவேஷம், பொறாமை, இரக்கமின்மை முதலிய துர்க்குணங்கள் இருக்கின்றனவோ அத்தகைய கூட்டத்தாருக்குள் ஐக்கியம் இராதென்பதில் சந்தேகமேயில்லை. ஆனாலும் களவு, கொள்ளை முதலிய செய்யத்தகாத துஷ்ட காரியங்களைச் செய்பவர் ஒற்றுமையுடன் வாழ்வதாகப் பலரும் உரைக்கக்கேட்டிருக்கிறோம். நிதானித்துப் பார்ப்போமானால் அது நிலையற்றதென்று தெளிவாய்த்தோன்றும். ஏனெனில் ஒருபயனை எதிர்பார்த்துச்செய்யும் எந்தக் காரியமும் அதில் எதிர்பார்த்த பயன் நின்றுபோகும் காலத்தில் அதுவும் நிற்கவேண்டுவதுதானே. பிரயோசனத்தைமட்டும் கருதியுழைக்கும் வேலைக்காரன் பிரயோசனம் நின்றுபோன காலத்தில் எஜமானனைவிட்டு விலகுவதுபோல் ஒருகாலத்தில் துர்ச்சனர் ஒற்றுமை விலகிவிடும். நாம் எதிர்பார்க்கும் ஒற்றுமையோ நாளடைவில் நம்மை எல்லா விதங்களிலும் மேன்மைபடையச் செய்யும். நமது சங்கங்களின் வியவகாரங்களைக் கவனிக்குங்கால் ஒற்றுமை என்பது சிறிதுமில்லையென்றே சொல்லவேண்டும். ஒற்றுமை உண்டாயின் நம்பிக்கை என்பது அங்குக்காணப்படவேண்டும். நம்பிக்கையுண்டாயின் வியவகாரங்

களும் பலக்காது. அவரவருடைய வாக்குநாணயமே வில்லங்க சர்ட்டிபிக்கட் ஆக மதிக்கப்படும். வரவரச் சத்தியம், நாணயம் முதலிய நற்குண நற்செய்கைகளில் விருத்தியடைந்து ஒற்றுமை மேலிடவேண்டுமென்று கருதியே மிகவும் அத்தியாவசியமான காலங்களில் தவிர மற்றச்சமயங்களில் வில்லங்க சர்ட்டிபிக்கட் வாங்காமலிருப்பது நல்லது என்று கனம் ரிஜிஸ்டிரார் அவர்கள் கூறுகிறார்கள்.

நற்குணத்தில் பழகவேண்டுமானல் அதற்குவரும் இடையூறுகளைத் தடுத்து நல்லவழிப்படுத்தத் தகுந்த சாதனம் வேண்டும். அவ்வித இடையூறுகள் பொறாமை, அசூயை, சோம்பேறித்தனம் முதலானவை. அரசனுக்கு மந்திரி எப்படியோ அப்படி ஒவ்வொருவருக்கும் தகுந்த சிநேகிதர்கள் வேண்டும். கட்டாயத்தினல் நற்செய்கை செய்தாலும் அதுவே நாளடைவிற் பழக்கமாகி இயற்கைக் குணமாக மாறிவிடும். இவைகளுக்கு முக்கிய சாதனமாயிருப்பது சங்கம்தான். அந்தச்சங்கம் சத்சங்கமாயிருத்தல்வேண்டும். காருண்ய கவர்ண்மெண்டார் இத்தகைய சத்சங்கங்களை ஆதரிக்கஏற்படுத்தியுள்ள சட்டதிட்டங்களைக் கவனித்தால் அவைகளை இதுகாறும் தழுவாமலிருப்பது நம்முடைய குறை என்று ஒவ்வொருவரும் மனதிற்குள்ளாவது சொல்லிக்கொள்ளத்தான்வேண்டும்.

முதலாவதாகச் சங்கத்தின் அங்கத்தினராவதற்குரிய லக்ஷணங்களைக் கவனிப்போம். 18 வயதுக்கு மேற்பட்டவர்கள்தான் மெம்பராகலாம் என்பதும், அவர் அச்சங்கம் ஏற்படுத்தப்படும் நகரம் அல்லது கிராமத்தில் வசிப்பவராயிருக்கவேண்டுமென்பதும் விதிக்கப்பட்டிருக்கிறது. இதன் உட்கருத்தென்னவெனில்: வியவகாரத்தில் உணர்ச்சியும் காரியாகாரியங்களைப் பகுத்தறியும் சக்தியும் அவர்கட்குவேண்டும் என்பது வயதைக்குறிப்பிட்டதால் ஏற்படுகிறது. அவ்வூரிலேயே வசிப்பவராக இருத்தல்வேண்டும் என்பதால் அச்சங்கத்திலுள்ள ஒவ்வொருவரையும் மற்றவர்கள் தெரிந்துகொள்ளவேண்டுமென்பதும் கேவலம் இரண்டொருவரிடம் பழகுவதைக் காட்டிலும் அனேகருடன் பழகுவதால் அடையத்தக்க பயனை நாம் அடையவேண்டும் என்பதும் வெளிப்படுகிறது. மேலும் ஒரு சங்கத்தார் என்றிருந்தாலும் அவர்கள் பரஸ்பரம் உதவிபுரிவதற்கான சமயம் வாய்க்கும்போது, தத்தம்

காரியங்களை எளிதில் சாதித்துக்கொள்ளலாம் என்பதும் ஒன்று. ஆனது பற்றியே ஏழைகளாகவிருந்தாலும் சத்தியம், நாணயம் (சொல்லுறுதி) எவ்விதத்திலும் பிறருக்குத் தம்மால் எவ்விதநஷ்டமும் ஏற்படக்கூடாதென்ற எண்ணமும் அதற்கான முயற்சியும் ஆகியவற்றை உடையவர்களாயிருந்தால் அவர்கள் இச்சங்கங்களில் மெம்பர்களாவ தற்குத் தகுதியுள்ளவர்கள் என்று சட்டம் ஏற்பட்டிருக்கிறது. உப கார சிந்தையுள்ள மனிதர்களும் சேர்ந்து வியவகாரங்களைச் சரிவர நடத்த உதவி புரியவேண்டும் என்பதும் அதிற் பொதிந்துள்ள கருத்தே. நல்லோர்கூட்டம் என்றது எவனும் தன்னைச் சங்கத்தில் மெம்பராகச் சேர்த்துக்கொள்ளும்படி பஞ்சாயத்தாரைக் கட்டாயப்படுத்த நியாய மில்லை யென்றவாக்கியத்தால் அசத்துக்களின் சேர்க்கை ஏற்படுவதா யிருந்தால் அதை நீக்கிவிடவேண்டும் என்று குறிக்கப்பட்டது.

சங்கத்தில் மெம்பராகும் ஒருவர் மூன்று அல்லது 5வரு அல்லது ஏதோ ஒரு குறிப்பிட்டகாலம் வரையில் அவசியம் மெம்பராகவேயிருந்து தீரவேண்டுமென்றும், அதன்பிறகும் மகா சபையார் அல்லது பஞ்சாயத் தார் சம்மதித்தால்மாத்திரம் அவர்கள் விலகிக்கொள்ளலாமென்றும் ஏற்பட்டிருக்கும் விதியைக் கவனிக்க, ஒரு சங்கம் ஏற்பட்டால் அதன் பலன் நன்மையாகும் அல்லது தீமையாகும் என்பது சிறிது காலத்தில் காணமுடியாததலால், சிறிது நீண்டகாலம் பரீக்ஷித்தே பிறகு அதன் பலாபலனை உணர்ந்து அதற்குத் தகுந்தபடி நாம் நடந்துகொள்ள வேண்டும் என்பதைக் காட்டுகிறது. "ஒரு வஸ்துவை ஏழு வருஷ காலம் வைத்துவை, அதன் உபயோகம் உனக்குத்தெரியும்" என்று ஆங்கிலத்தில் ஓர் பழமொழியுண்டு. நாம் எதையும் பரபரப்பாய் ஒரு விதமாக நிர்ணயித்துவிடக்கூடாதென்றும், இப்படிச்செய்வதானது நமது முன்னேற்றத்திற்கு இடையூறென்றும் கருதியே இந்நிபந்தனை ஏற்பட்டுள்ளது.

டிபாசிட்டுகள் (பணம் போட்டுவைத்தல்) தனிகர்களுக்கு உபகார சிந்தையையும் ஏழைகளுக்கு வருவாயின் மார்க்கத்தையும் எளிதிற் கற் பிக்கிறது. தனிகர்கள் தங்கள் பணத்தை லேசான வட்டிக்கு ஓர் சங்கத்தில் போட்டுவைக்கிறார்கள். அந்தப் பணத்தைச் சற்று அதிக வட்டி கொடுத்து ஏழைகள் வாங்கி உபயோகிக்கிறார்கள். ஏழைகளும்

கொஞ்சம் கொஞ்சமாகத் தொகைகளை டிபாசிட்செய்துவந்தால் பலதுளி பெருவெள்ளம் என்பதுபோல் நாளடைவில் பெருகுவதோடுகூடத் தாம் போட்ட முதலுக்கு அதிகம் கிடைக்கிறதென்ற ஆவலுடன் சிக்கனத்தில் பயில்வார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

கடன் சம்பந்தமாயுள்ள விதிகளும் ஜனங்களின் நன்மைக்காகவும் முக்கியமாய் ஏழைகளுக்கு உபயோககரமாகவும் ஏற்பட்டிருக்கின்றன. கிராமசங்கங்களின் நிபந்தனைகளைக் கவனித்தால் ஒவ்வொருவனும் தனக்குள்ள சௌகரியங்களையும் பிறர்க்குத் தாராளமாய்ச் சொல்லவேண்டி வருகிறது. மற்றவர்களும் அதன் நியாய அநியாயத்துக்குத் தக்கபடி அவனுக்கு நன்மைபுரியும் வகையில் பைசல்செய்யவேண்டி வருகிறது. இந்தக் கருத்துச் சாதாரணமாய் விளங்குவது அரிது. அறிய முயல்வது அதனினும் அரிது.

மற்றெல்லா நிபந்தனைகளையும் காட்டிலும் கடன்சம்பந்தமான நிபந்தனைகளே இச்சங்கங்களின் ஒருமையை நன்குவிளக்குகின்றன. கேவலம் லேவாதேவி நடத்தும் ஓர் சாவகாரி ஒருவனுக்குப் பணம் கடன் கொடுக்கையில் தன் பணத்தைத் திரும்பவரப்பற்ற வகையிருக்கிறதா வென்பதைமட்டிலும் கவனிப்பானேயல்லாமல் வேறெதையும் கவனிப்பதில்லை. ரூபாய் 5000 பெறுமான சொத்துள்ள ஒருவனுக்கு சாவகார் ரூபாய் 1500 அல்லது 2000 கூட யோசனைபண்ணாமல் கொடுக்கத் தயாராக இருப்பான். இச் சங்கமோ அப்படிச்செய்யத் துணியாது.

பின்வரும் கேள்விக்குத்தகுந்த சமாதானம் (பதில்) வந்து திருப்தியானலொழிய கடன் பட்டுவாடாவாகாது. (1) இவனுடைய (மனுதாருடைய) சொத்திலிருந்து நற்கால வருமானம் என்ன? (2) இதர வருமானம் ஏதாவது உண்டா? (3) இவ்விரண்டு வகையிலிருந்தும் வரும் வருமானம் இவன் தன் குடும்பத்தைச் சம்ரக்ஷிக்கப் போதுமானதா? (4) போதுமானல் இப்போது கேட்கும் கடன் என்ன உபயோகத்திற்காக? (5) அது உள்ளபடி நஷ்டத்தை உண்டாக்கக்கூடாததான முயற்சிதானு? (6) அம்முயற்சியால் தானும் சிறிதுலாபமடைந்து சிறிதுசிறிதாகவாவது கடனைத்தீர்க்கமுடியுமா? (7) ஏற்கனவே உள்ள வருமானம் போதாதகாரணத்தால் கடன்கேட்கும்பக்ஷத்தில் கேட்கும் தொகையைக்கொண்டு வருவாய்க்கு இடமான ஏதாவது முயற்சிசெய்

வானா? (8) அந்த முயற்சி சரியான முயற்சிதானா? அதனால் மேன் மேலும் கஷ்டம் அதிகரிக்காமலிருப்பது அவசியம்.

ஒருவனுக்கு ரூ. 5,000 பெறுமான நிலங்கள் இருக்கின்றன. அவனுக்கு நிலத்திலிருந்து கிடைக்கக்கூடிய வருமானம் எச்செலவும் நீக்கி ரூ. 150:க்கு மேல் ரூ. 200-க்குள் என்று வைத்துக்கொள்வோம். அவனுடைய குடும்பத்துக்கு மாதம் 12 ரூபாய்க்குமேல் 17 ரூ. வரையில் தன் செலவுசெய்யலாம். அப்படிச் செலவுசெய்தால் ஒரு காசுகூட மிஞ்சாது. மேல்விரித்த மாதிரியான குடும்பத்தார்களுக்கு அவர்களுடைய ரூ. 5,000 பெறுமான நிலங்களின் ஜவாப்தாரியாய் ரூ. 100 எனும் கடன்கொடுக்கப்படமாட்டாது. அப்போது தான் வாங்கும் தொகையினால் கிடைக்கும் வருமானம் தன் குடும்பத்துக்கும் கண்டு சுமார் ஒன்று அல்லது ஒன்றரை வருஷத்திலாவது கடனைத் தீர்க்கத்தக்கதாயிருக்கவேண்டும். இவ்வளவு பரிசீலனைக்கு உட்பட்டுப் பட்டுவாடாவாகும் கடன்கள் வாங்குபவருக்கும் கொடுப்பவருக்கும் கொடுக்கச்கூடிய ஆனந்தத்திற்கு அளவும் உண்டோ? இவ்விதம் காரியங்களை நடத்துபவரிடம் ஈசுவரகிருபை தானே வருமன்றோ?

மேலும் ஒரு விஷயம் இங்கு சொல்லப்படவேண்டும். ஒரு காரியத்தையுத்தேசித்து வாங்கப்பட்ட தொகை அதேகாரியத்துக்கு உபயோகப்படாவிட்டால் உடனே தொகை வாபஸ் செய்யப்படவேண்டுமென்று விதித்திருப்பது ஓர் சிலாக்கியம். இதற்குக்காரணம் ஒருவன் வீடுகட்டுவதற்கென்று 100 ரூபாய் வாங்குகிறான். திடீரென்று மழை பெய்து வீடுகட்டுவதற்குரிய சாமான்கள்வாங்கவோ வேலைநடத்தவோ முடியாமற்போயிற்று. அதைக்கொண்டு மாடு வாங்குகிறேன் என்கிறான். இதில் கவனிக்கவேண்டியவிஷயம் இரண்டுண்டு: வீடுகட்டல் அல்லது மராமத்துச்செய்தல் 1. உழவுமாடு வாங்குதல் 1. ஆக இரண்டும் அவசியமென்று வைத்துக்கொள்வோம். அதில் எது அத்தியாவசியம் என்பதைக் கவனித்துத்தான் பணம்கேட்கிறான். தன் சக்திக்கு ரூ. 100-க்கு மேல் இந்தச்சமயம் கடன் வாங்கக்கூடாதென்பது அவன் துணிபாயிருந்திருக்கவேண்டும். ஆகையால் வீடுகட்ட எத்தனித்த ஒருவன் அது செய்வதற்குப்பதிலாக அதே பணத்தை மாடுவாங்குவதற்கு உபயோகிப்ப

தால் பின் வீடுகட்டவேண்டிய அவசியம் சித்தமாயிருப்பதால் அவன் 200-ரூபாய்க் கடனுக்கு உள்ளாகவேண்டிவரும்.

1. ஐக்கிய நாணயச்சங்கங்கள் நமது சகலவிதமான விருத்திக்கும் ஏற்பட்ட ஒரு முக்கியசாதனம். (2) அச்சங்கங்களின் நடவடிக்கைகளைப் பஞ்சாயத்தார் சரிவர நடத்திவந்தால்மாத்திரம் அதன் பலனை அனுபவிக்கலாம்; இல்லாவிடில் அது நம்மை அடிமையினும் அடிமையாக்கிவிடும். (3) ஆகையால் பஞ்சாயத்தார்கள் நடுவுநிலைமை தவறாதவர்களாய் இருந்து பிறரையும் தவறுங்காலத்தில் சிக்ஷித்து வசப்படுத்தி ஒழுங்குக்குக் கொண்டுவர முயலவேண்டும். (4) இவ்வாறு செய்வது தான் ஜனசமூகத்தை முன்னுக்குக்கொண்டுவரும் முறை. (5) இது தான் தேசத்துக்கே அனுகூலமான காரியம்.

இந்த இயக்கம் எந்நாட்டுக்கும் புதியதாயிருப்பினும் இந்நாட்டுக்கு இது புராதனமாயுள்ள சொத்து. எந்தக்கிராமத்தில் போய்ப்பார்த்தாலும் 'சமுதாயம்' என்ற பெயரோடுகூடிய நிலங்கள் காணப்படும். அதாவது ஒரு கிராமத்திலுள்ள மகாஜனங்களுக்கு அந்த நிலங்களின் ஆமிஸம் வீதாசாரப்படி பாத்யதையுள்ளது என்று அர்த்தம். அப்படிப்பட்ட ஸ்தலங்கள் ஏற்பட்டிருக்கவேண்டியது என்றும், பொதுவான கண்மாய், கால், மராமத்து, காடுகாவல், கோவில்கள், பொது தருமம், ஆகிய காரியங்களுக்கு இந்த ஐவேஜைக்கொண்டு உசிதப்போல் மகாஜனங்கள் ஒன்றுகூடி ஆலோசித்து நடத்துவதென்றும் ஏற்பட்டுள்ளது. ஆனது பற்றியே "எத்தால் வாழலாம்" என்று வினாவும் "ஒத்தால்வாழலாம்" என்று விடையுமாகப் பழமொழிகள் வழங்கிவருகின்றன.

நாம் ஐக்கியத்தில் பழக்கப்படின் நுனிக்கரும்பிலிருந்து அடிக்கரும்புவரை ருசிபார்ப்பவன் வரவா அதிகமான தித்திப்பை அடைவது போல் அனுகூலம் அதிகரிக்கப்பெறுவோம்.

சுப்பிரமணிய சாஸ்திரி,
இராமநாதபுரம் யூனியன் பிரசிடெண்டு,

மணிமேகலையுஞ் சிலப்பதிகாரமும்.

விஷயவரிசை.

I. சிலப்பதிகாரக் கூற்றுக்கள்.
II. மணிமேகலை என்னும் நூலின் கூற்றுக்கள்.
III. மணிமேகலை, சிலப்பதிகாரம் என்னுமிவற்றமைந்த முரண்பாடுகள்.

I. கண்ணகியம்மை சுவர்க்கமும் செங்குட்டுவன் வழிச்செலவும்.
II. மாடலனுஞ் செங்குட்டுவனும்.
III. செங்குட்டுவன் வஞ்சி சேர்தல்.
IV. கண்ணகியம்மை பிரதிஷ்டை.
V. மணிமேகலை துறவு.
VI. தேவந்தி முதலியோர் வஞ்சிசேர்தல்.
VII. மூன்றிளம் பெண்கள்.
VIII. மணிமேகலைவணக்கமுஞ் சிலப்பதிகாரமும்.
IX. சிலப்பதிகாரம் இயற்றப்பட்டகாலம்.
X. புகாரழிவும் சிலப்பதிகாரமும்.
XI. மணிமேகலையும் இளங்கோவடிகளும்.
XII. கண்ணகியம்மையின் சமயம்.
XIII. இருபெரு நூலாசிரியர் தஞ் சமயம்.
XIV. மணிமேகலையில் வடசொற்கலப்பு.
XV. முடிவுரை.
XVI. இருபெருநூலின் நிகழ்ச்சிக்குரியகாலவட்டவணை

சென்ற கார்த்திகைத் திங்கட் செந்தமிழிலே திருவாளர் இ. மு. சுப்பிரமணியபிள்ளையென்பார் "மணிமேகலை" எனப் பொதுமொழியிட்டெழுதியதொரு பொருளுரை காணப்பட்டது.

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கொள்கையானும் சரிதப்போக்கானும் தம்முண் மாறுபட்டுள்ளன; மணிமேகலையிலே வடசொற்கள் நனிகலந்துவிட்டன; ஆதலிற் சிலப்பதிகாரக்கேட்டருளிய தண்டமிழ்ச் சாத்தனாரும் வேறு; மணிமேகலை செய்திட்டவரும் வேறு; ஞானவெட்டி என்னும் நூலுக்குத் திருவள்ளுவனார் பெயருக்கு ஆசிரியரென்றாற் போல மணிமேகலை என்னும் நூலுக்கும் தண்டமிழ்ச்சாத்தனார் ஆசிரியர் ஆயினர் என்றாக்குப் பிள்ளையவர்கள் தமது பொருளுரையை நனியாய்ந்து புனைந்து வெளியிட்டுப் போந்தார்.

பிள்ளையவர்கள் ஆராய்ந்த முடிபுகள்.

I. சிலப்பதிகாரக்கூற்றுக்கள்.

(1) கண்ணகியம்மையார் தம் காப்புக்கடை நிறுத்தற்கு முன்னரேயே மணிமேகலை கோதைத்தாமம் குழலொடு களைந்து போதித்தானம் புரிந்தறம் பூண்டாள் என்பது.

(2) சித்திராபதியிடத்திலே பருவம் அடையுங்காறும் இருந்துவந்த மணிமேகலை அதன்பின் மாதவியோடு இருந்துவந்தாள் என்பது.

(3) மணிமேகலை துறவுபூண்ட கொள்கையிலே மாதவியின் நற்றாய்போலச் சித்திராபதி காணப்படுகிறாள் என்பது.

(4) மாதவி, மணிமேகலை என்னும் இவர்கள் குழல்களைந்து துறவுபூண்டனர் என்பது.

II. மணிமேகலை என்னும் நூலின் கூற்றுக்கள்.

(5) மாதவி மணிமேகலை என்னுமிவர்கள் குழல்களைந்தவாகக் கூறப்பட்டிலர் என்பது.

(6) மாதவியோடிருந்துவரும் மணிமேகலையைக் கணிகையர் கோலங் கொள்ளுமாறு சித்திராபதி மயக்கி வற்புறுத்துகிறாள் என்பது.

(7) சித்திராபதி பணப்பேய்பிடித்து மாதவி மணிமேகலை என்னும் இவர்களை மயக்கிவருதலிலே ஓய்வுறாது நிலைபெறுகின்றாள் என்பது.

III. மணிமேகலை, சிலப்பதிகாரம் என்னுமிவற்றமைந்த முரண்பாடுகள்.

(8) மணிமேகலையிற் கூறிய உதயகுமாரன் சாவு; புகாரழிவு என்னுமிவை சிலப்பதிகாரத்திற் காணப்பெற்றில என்பது.

(9) கண்ணகியம்மை திருக்கோயிலுட்சென்று மணிமேகலை வணங்கியது சிலப்பதிகாரத்திற் காணப்பட்டிலது என்பது.

இவற்றின் மறுப்பும், உண்மைநிலைநிறுப்பும் கண்ணகியம்மைமுதலியோர் வரலாறு முதலியன விளக்கப்படும் இடங்களிலே ஏற்றபெற்றி கூறப்படும்.

I. கண்ணகியம்மை சுவர்க்கமும், செங்குட்டுவன் வழிச்செலவும்.

வைகாசித்திங்களின் கடைப்பகுதியிலே கண்ணகியம்மையோடு கோவலன் பூம்புகார் நீத்து மதுரைசெல்வான் போந்தனன். ஆடித் திங்களிற் கண்ணகியம்மையான் மதுரை எரியுண்டது.

"ஆடித் திங்கட் பேரிருட் பக்கத்
தழல்சேர் குட்டத் தட்டமி ஞான்று
வெள்ளி வாரத் தொள்ளெரி யுண்ண
வுரைசான் மதுரையோ டரைசு கெடுறும்".

(சிலப். XXIII 133–36).

இதுகழிந்த பதினான்காம் நாளிறுதியிலே வஞ்சிநாட்டிலே திருச் செங்குன்றிலுள்ள ஒரு வேங்கைமரத்தினடியிலே இருந்த கண்ணகி யம்மை கடவுள்வடிவொடு விண்ணியங்கூர்திமிசைவந்த கோவலனொடு ஒருங்கு வந்தேறிச் சுவர்க்கம் புக்காள்.

"எழுநா ளிரட்டி யெல்லை சென்றபின்
றொழுநா ளிதுவெனத் தோன்ற வாழ்த்திப்
பீடுகெழு நங்கை பெரும்பெய ரேத்தி
வாடா மாமலர் மாரி பெய்தாங்
கமரர்க் கரசன் றமர்வந் தேத்தக்
கோநகர் பிழைத்த கோவலன் றன்னொடு
வான வூர்தி யேறினண் மாதோ
கானமர் புரிகுழற் கண்ணகி தானெனு".

(சிலப். XXIII 193–200.)

கண்ணகியம்மை சுவர்க்கம்புக்கதைக் குறவர்களானறிந்து அவளது பெருமை முதலியவற்றை அங்குவந்து தன்னைக்கண்டு கண்களிமயக்கத் துக் காதலோடிருந்த தண்டமிழாசான் சாத்தன் உணர்த்த உணர்ந்து கொண்டு பத்தினிக்கடவுளைப் படிமத்தெழுதிப் பரசல்வேண்டுமென விழைந்து இமயஞ்சென்று கற்கால்கொண்டு கங்கைப்பேர்யாற்றின் மங் கலநீர்ப்படுத்தி அதன்றென்கரையிலே அரசுவிளங்கிருக்கையிற் செங் குட்டுவன் அமர்ந்தினிதிருந்தான்.

ஆடித்திங்களின் ஈற்றுப்பகுதியிலே குன்றக்குறவர் வழியாகக் கண்ணகியம்மை சுவர்க்கம்புக்கதை அறிந்துகொண்ட செங்குட்டுவன் ஆவணித்திங்களிலே வஞ்சியிலிருந்து புறப்பட்டிருத்தல் வேண்டும். அங்ஙனம் புறப்பட்டவன் இமயமுதலாகிய இடங்களுக்குச் சென்று முப்பத்திரண்டாந்திங்களாகிய சித்திரையிலே கங்கைப்பேர்யாற்றுத் தென்கரையிலே அரசுவிளங்கிருக்கையில் அமர்ந்தினிதிருத்தல் வேண்டும்.

"இறையோன் செவ்வியிற் கணியெழுந் துரைப்போ
னெண்ணான்கு மதியம் வஞ்சி நீங்கியது
மண்ணாள் வேந்தே". (சிலப். XXVII-148-150.)

II மாடலனுஞ் செங்குட்டுவனும்.

தாழ்நீர்வேலித் தலைச்செங்கானத்து நான்மறை முற்றிய நலம்புரி கொள்கை மாடலன் என்பான் மாதவமுனிவன் மலைவலங்கொண்டு குமரியம்பெருந்துறை கொள்கையிற் படிந்துவருபோது மதுரைமாநகர்ப் புறஞ்சேரியிற் கோவலன் கண்ணகியம்மை என்பவர்களைக்கண்டு நெஞ்சம் புண்ணாகி அன்னவர்களை மதுரையணுகி யமைந்தினிதிருக்குமாறு ஆணையிட்டான். ஆணையிட்டவன் பின்னர் வாய்வாட்டானைத் தென்னவன் கூடலுட்புக்கு வள்ளற் கோவலன் வாள்வாய்ப்பட்டதையும், மதுரையோடரசுகேடுற்றதையும், கண்ணகியம்மை வஞ்சிசென்று காதலனொடு வானகமருவியதையும், அதனையறிந்த மாதரி அடைக்கலமிழந்தேன் என்றழுர்கொண்டு ஆருயிர்நீத்ததையும் ஒழிவின்றுணர்ந்து கொண்டு தன்பதிப் பெயர்ந்துபோந்து மாசாத்துவான் முதலியோர்க்கு அவற்றையெல்லா மறிவித்தான்.

[இவன் ஆடித்திங்களின் கடைப்பகுதியிலே மதுரையகன்று புகார் அடைதற்கு இரண்டு திங்கள் வேண்டுமாதலிற் புரட்டாதித்திங்களிற்றான் கண்ணகி கோவலன் சுவர்க்கம்புக்கதை மாசாத்துவான் முதலியோர்க்கு உணர்த்தியிருத்தல் வேண்டுமென்க.]

கோவலன்றாதையும், கண்ணகியம்மை தாதையும் மைந்தற்குற்றதையும், மடந்தைக்குற்றதையும் கேட்டுக் கொடுந்துயர்எய்திப் பிக்ஷுகளின் பள்ளியைஅடைந்து துறவுபூண்டனர். அன்னவர் மனைவியரும் அத்துயர்க்காற்றா துயிர்நீத்தனர்.

இவற்றையெல்லாம் கேட்டறிந்த மாதவி சித்திராபதியைநோக்கி 'யான் நற்றிறம் படர்கேன்' நீ பூப்படையாத மணிமேகலை வான்றுய ருறுக்கும் கணிகையர்கோலங்காணாதொழிகென அறிவுறுத்தி' அவள்பா லொப்புவித்துத் துறவுபூணும்வேட்கை பிடர்பிடித்துந்துதலிற் பிக்குணிப்பள்ளியை மேவி ஐம்பேரொழுக்கம், முறைபிறழுணுண்ணமை ஆகிய இருமூன்றறங்களையும் ஈராண்டுகாறும் இனிது கைக்கொண் டொழுகிவாலாயினள்.

> "ஆங்ஙன மன்றியு மாயிழை கேளா
> யீங்கிம் மாத ருறைவிடம் புகுந்தேன்
> மறவணை நீத்த மாசறு கேள்வி
> யறவண வடிக ளடிமிசை வீழ்ந்து
> மாபெருந் துன்பங் கொண்டுள மயங்கிக்
> காதல னுற்ற கடுந்துயர் கூறப்
> பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
> பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
> பற்றின் வருவது முன்னது பின்ன
> தற்றோ ருறுவ தறிகென் றருளி
> யைவகைச் சீலத் தமைதியுங் காட்டி
> யுய்வகை யிவைகொளென் றரவோ னருளினன்."
>
> (மணி. II 58-69.)

[சிலப்பதிகாரம் நீர்ப்படைக்காதை 52-ஆம் வரி முதலாகியவற்றையும் நோக்குக.]

["இருபது பிராயத்திற்குக் குறைவில்லாதவர்கள் துவராடையை உடுத்திக்கொண்டு தலைமுழுவதையும் முகமுழுவதையும் சிரைத்துக் கொண்டு நோகவே ஸந்யாஸத்தை அடையலாம்" என்னும் பௌத்த சங்கவிதி யுண்மையானே மாசாத்துவானும், மாநாய்கனும், கோவலனும் கண்ணகியம்மையுஞ் சுவர்க்கம்புக்கார் என்றதை மாடலன்பால் அறிந்தவுடனே துறந்தனர்.

"பெண்பாலார் இரண்டுவருஷகாலம் பஞ்சசீலம், அகாலபோஜனத் தியாகம் ஆகிய ஆறுதருமங்களையும் கைக்கொண்டொழுகிய பின்புதான் தமக்கு ஸந்யாசத்தைத் தரும்படி ஸங்கத்தின் உபயபாகத்தாரையும்

வேண்டிக்கொள்ளலாம்" என்னும் விதிகொண்டு மாதவி இரண்டாண்டு வரையும் ஒழுகிவந்தாள்.]

இதுபோது கண்ணகியம்மை சுவர்க்கம்புக்கு இருபத்தாறு திங்கள் கழிந்தன. இது புரட்டாதித்திங்களாகும். இரண்டு இந்திரவிழாக்களுக்கு இதுவரையும் மாதவி சென்றிலள். இத்திங்களிலே மாதவி கோதைத்தாமங் குழலொடு களைந்து போதித்தானம் புரிந்து அறமேற்கொண்டாள்.

இக்கொள்கையை, சுருக்கமும், மாடலனுக்குப் பௌத்தமதத்தின்மேல் இயல்பாயமைந்த வெறுப்பும் அவளது கூந்தற்கழிவிற் கிரக்கமும் பிறவும்கருதி மாடலன்கூற்றாகப் பின்வருமாறு சிலப்பதிகாரங்கூறும்.

"மற்றது கேட்ட மாதவி மடந்தை
நற்றாய் தனக்கு நற்றிறம் படர்கேன்
மணிமே கலையை வான்றுய ருறுக்குங்
கணிகையர் கோலங் காணா தொழிகெனக்
கோதைத் தாமங் குழலொடு களைந்து
போதித் தானம் புரிந்தறங் கொள்ள."

(சிலப். XXVII 103-108).

பிள்ளையவர்கள் இவ்வடிகளை ஆதாரமாகக்கொண்டு கோவலன் கண்ணகியம்மை என்பவர்கள் சுவர்க்கம்புக்கதை மாடலனா லறிந்தபொழுதே மாதவி குழல்களைந்து துறவுபூண்டாள் என்று கூறுகின்றனர்.

கண்ணகியம்மை கோவலன் என்பவர்களின் தந்தையர் துறவுபூணற்கும், அவர்தம் மனைவியர் மக்களைநீத்த துயருக்கு ஆற்றாதவராய் உயிர்நீத்தற்கும், மாதவி கோதைத்தாமங் குழலொடுகளைந்து போதித்தானம் புரிந்தறங்கோடற்கும் தானே காரணன் என்றுகருதிய மாடலன் தனக்கமைந்த பாவத்தையொழிப்பான்விழைந்து நன்னீர்க்கங்கையாடற்குப் போந்தான்.

"என்வாய்க் கேட்டோ ரிறந்தோ ருண்மையி
னன்னீர்க் கங்கை யாடப் போந்தேன்"

(சிலப். XXVII 109-110.)

[மாடலன் கங்கைக்கரையிலே சேரன் செங்குட்டுவனிடத்தே மணிமேகலை துறவைக் கூறிலன். ஆதலின் அவளது துறவுக்கு முன்னும் மாதவி துறவை அவனுழையிற் கூறினனாதலின் இவளது துறவிற்குப் பின்னும் அமைந்த இடைக்காலமே இவனது வழிச்செலவு நடந்தகாலமாகும்.

மாதவி குழல்களைந்தமை கேட்டவுடனே இவனுக்கு ஆறாத் துயரம் வந்திருத்தல் வேண்டும். வரவே, மேற்கூறிய எல்லாத் தீச்செயல்களுக்குந் தன்னையே காரணனாக எண்ணினனாதலின் மாதவி துறந்ததற்கு அடுத்த திங்களாகிய ஐப்பசியே இவன் புகாரைவிட்டுப் புறப்பாடுற்றதுவாகும்.

தென்னாட்டிலிருந்து காசியை அடைதற்கு ஆறுதிங்களே வேண்டுமென்பது பண்டையோர்க்கெல்லாம் ஒப்பமுடிந்ததொன்றாகும். ஐப்பசித்திங்களிற் புறப்பட்ட மாடலன் சித்திரைத்திங்களிலே கங்கையை அடைந்துவிட்டான்.

இதுபோது கண்ணகியம்மை சுவர்க்கம்புக்கு முப்பத்திரண்டு திங்கள் கழிந்தன. மாடலன் சேரன்செங்குட்டுவனோடு அளவளாவியிருந்து வரும்போழ்து ஒருகணிபெழுந்து அரசே நீ வஞ்சியைநீங்கி முப்பத்திரண்டுதிங்களாயின என்று கூறினன்,

"இறையோன் செவ்வியிற் கணிபெழுந் துரைப்போ
னெண்ணான்கு மதியம் வஞ்சி நீங்கியது
மண்ணாள் வேந்தே வாழ்கென் றேத்த"

(சிலப். XXVII 148-150)

இதனான் மாடலன் வழியாகக் கோவலன் கண்ணகியம்மை என்னுமிவர் சுவர்க்கம்புக்கதை, மாதவி அறிந்ததுமுதலாக மாடலன் தனது பாவமகற்றக் கங்கைபோந்த நிறுதியாகவுள்ள எல்லாவற்றிற்கும் அமைந்த காலவரிசையின் உண்மை அங்கைக்கனியாதல் காண்க.

[இச்சித்திரைக்கும் மாதவி இந்திரவிழாவுக்குச் சென்றிலள். இதனோடு மூன்றுவிழாக்கள் கண்ணகியம்மை சுவர்க்கம் புக்கபின்னர் நடந்தேறிய]

போந்த மாடலன், கண்ணகியம்மையார் படிமக்கல்லை நன்னீர்க் கங்கையாட்டி, அதன் தென்கரையிலே அரசவிளக்கமளியிலே விற்

றிருந்த செங்குட்டுவனைக்கண்டு, கோவலன் கண்ணகியம்மை என்னு மிவர் சுவர்க்கம்புக்க காரணத்தானே அவர்தம் அன்னையர் உயிர்நீத்தது முதலாக மாதவி துறந்ததுவரையும் நடந்திட்ட வரலாறுகளை, அவனுக்கு விளங்குமாறு விளம்பினான்.

> "மாடல மறையோன் வந்து தோன்றி
> வாழ்க வெங்கோ மாதவி மடந்தை
> கானற் பாணி கனக விசயர்த
> முடித்தலை நெரித்தது" (சிலப். XXVII 48–51)

[சிலப். XXVII 67–110 என்னுமிவ்வடிகளையும் நோக்குக.]

III. செங்குட்டுவன் வஞ்சிசேர்தல்.

கண்ணகியம்மை சுவர்க்கம்புக்க முப்பத்துநான்காந் திங்களும், செங்குட்டுவன் வஞ்சிநீங்கிய முப்பத்துமூன்றாந்திங்களுமாகிய வைகாசித்திங்களிலே மாடலனோடு செங்குட்டுவன் கங்கையிலிருந்து வஞ்சிக்குப் பிரயாணமாயினான். பகைவரை வெல்லுதல், படிமக்கல்லெடுத்தன் முதலாகிய காரணங்களானே கங்கைக்கரை சார்தற்கு எண்ணான்குதிங்கள் சென்றனவேனும்; வஞ்சியைநீங்கி நாள் பலவானமையானும், ஆண்டிருந்து வந்தபொழுதே நட்பாசர்களிடங்களிலே தங்கிவந்தமையானும் கண்ணகியம்மையைப் பிரதிஷ்டைசெய்தலி லூக்கம் நனிபடைத்திட்டமையானும் இன்ன பிறவாற்றானும் அவன் வஞ்சியைஅடைதற்கு இருபது திங்களே போதியவாகும்.

இதுபோது கண்ணகியம்மை சுவர்க்கம்புக்கு ஐம்பத்துநான்கு திங்களாயின. இதுவே தைத்திங்களாகும்.

IV. கண்ணகியம்மை பிரதிஷ்டை.

செங்குட்டுவன் இமயஞ்செல்வான் புறப்பட்டபொழுதே மங்கலாதேவியின் கோட்டப்பணியும் தொடங்கப்பெற்றிருத்தல் வேண்டும். அவன் பின்னர் வஞ்சியை அடைதற்கு ஐம்பத்துநான்குதிங்கள் ஆயினமையின் அவனடைவிற்குள்ளேயே அந்தப்பணி நிறைவுபெற்றிருத்தல் வேண்டும். அவன் வஞ்சிக்குவந்தபின்னர்க் கண்ணகியம்மையின் தெய்வப்படிமம் எழுதுவதற்கும், எழுதிய படிவத்தை நாட்டுவதற்கும் மூன்றுதிங்கள் சென்றிருத்தல்வேண்டும். ஆதலிற் கண்ணகியம்மை

திருவுருவம் பங்குனித்திங்களிலே நிறைவுபெற்றுச் சித்திரைத்திங்களிலே கருப்பக்கிருகத்திலேநாட்டப்பட்டு, நாட்டப்பட்டமைக்கேற்ற பிரதிஷ்டாவுற்சவமுதலியன நடைபெற்றிருத்தல் வேண்டும்.

அவ்வுற்சவ முதலியன வைகாசித்திங்களிலே இருபதாந்தேதியளவிலே நிறைவேறிக் கும்பாபிஷேகம் நடத்தியிருத்தல்வேண்டும். ஆனித்திங்களிடைப்பகுதியிலே மங்கலாதேவியின் ஆட்டைத்திருவிழா வாரம்பித்து ஆடித்திங்களிடைப்பகுதியிலே நிறைவுபெற்றிருத்தல் வேண்டும். அந்நிறைவு பெற்றநாளோ கண்ணகியம்மை சுவர்க்கம்புக்க நாளென்க.

"கைவினை முற்றிய தெய்வப் படிவத்து
வித்தக ரியற்றிய விளங்கிய கோலத்து
முற்றிழை நன்கல முழுவதும் பூட்டி
வேள்வியும் விழாவும் நாடொறும் வகுத்துப்
பூப்பலி செய்து காப்புக்கடை நிறுத்திக்
கடவுண் மங்கலஞ் செய்கென வேவினன்
வடதிசை யடக்கிய மன்னவ ரேறென்"

என நடுகற்காதையினும்,

"கோயில்புக்கு நங்கைக்குச் சிறப்பயர்ந்த செங்குட்டுவற்கு" என வாழ்த்துக் காதையினும்,

"கடவுண் மங்கலங் காணிய வந்த
மடமொழி நல்லார்"

என வரந்தரு காதையினுங் கூறியன ஆராய்தற்பாலன.

[கண்ணகியம்மை பிரதிஷ்டாகாலத்திற் றண்டமிழ்ச் சாத்தனார் வாராமைக்குரிய காரணமுஞ் சிந்திக்கற் பாலது.]

V. மணிமேகலை துறவு.

கண்ணகியம்மை சுவர்க்கம்புக்கபின்னர் நடந்த இரண்டுவிழாக்களுக்கு மாதவியே வரவில்லையென்னுஞ் சினம் அவ்வூரார்தமக்கெல்லாம் மிகுந்துவந்தது. எனினும் அம்மாதவி, கோவலன்மேல்வைத்த அன்பின் மிகுதியும், அவனதுபிரிவால் இவளதாற்றாமையும், மணிமேகலை விரைந்து பூப்படைந்திடுவள். ஆதலின் அவள் அடுத்த சித்திரைவிழாவிற்கு வருதல்கூடுமென்று வைத்திட்ட நம்பிக்கையும் பிறவுமே இவள்மேல் ஊரார்வைத்தவருஞ் சினந் தணிந்துவருதற்குக்காரணங்களாயின.

இச் சித்திரைத்திங்களை அடுத்துவந்த புரட்டாசித்திங்களிலே மாதவி குழல்களைந்து துறவுபூண்டாள். அவளது வடிவம் வேறுபாட்டுற்றமைக்குப் பெரிதும் இரக்கங்கொண்ட ஊரவரெல்லாரும் பழிதூற்றற்கு முந்திவிட்டனர். இப்புரட்டாதியை அடுத்துவந்த சித்திரைத் திங்களிலே அவண்மேற் குறுகிய பழி மிகப்பெருகிவிட்டது.

அத்திங்களிலே மணிமேகலை பூப்படைந்துவிட்டாள். அவள் அடுத்துவரும் நான்காம்விழாவிற்கு வருதல்கூடும் என்னும் நம்பிக்கை மிகுதியான் மாதவிமேலேறியிருந்த பழிச்சுமை சிறிது குறைவுற்றது.

இதனையடுத்த வைகாசித்திங்களிலே சித்திராபதி தினதுமகள் பூப்படைந்துவிட்டாள்.

"மையீ ரோதி வகைபெறு வனப்பி
னைவகை வகுத்தும் பருவங் கொண்டது
செவ்வரி யொழுகிய செழுங்கடை மழைக்க
ணவ்விய மறிந்தன வதுதா னறிந்தில
ளொத்தொளிர் பவளத் துள்ளொளி சிறந்த
நித்தில விளநகை நிரம்பா வளவின
புணர்முலை விழுந்தன புல்லக மகன்றது
தளரிடை நுணுகலுந் தகையல்குல் பரந்தது
குறங்கிணை திரண்டன கோலம் பொறாஅ
நிறங்கிளர் சீறடி நெய்தோய் தளிரின
தலைக்கோ லாசான் பின்னுள னாகக்
குலத்தலை மாக்கள் கொள்கையிற் கொள்ளார்
யாது நின்கருத் தென்செய் கோவென
மாதவி நற்றாய் மாதவிக் குரைப்ப" (சிலப். XXX 1–23.)

உரைக்கப்பட்ட மாதவி மணிமேகலையை நோக்கி எனது மகளே ஈண்டு வருகவென்று அழைத்து அவளுக்கு ஐம்பேரொழுக்கம் பொழுதிலாணித்தல் ஆகிய ஆறுபேரறங்களையும் ஸங்கத்தாரால் உபதேசிக்குமாறு புரிந்தாள். இவ்வுபதேசம் வைகாசித்திங்களில் நிறைவேறியது.

[சிலப்பதிகாரத்திலே,

"வருகவென் மடமகள் மணிமே கலையென்
றுருவி லாள னொருபெருஞ் சிலையொடு

விரைமலர் வாளி வெறுநிலத் தெறியக்
கோதைத் தாமங் குழலொடு களைந்து
போதித் தானம் புரிந்தறம் படுத்தனள்"

என்று கூறப்பட்டுளது. செங்குட்டுவன் கண்ணகியம்மையின் கடவுண்மங்கலங் காணியவந்த தேவந்திகையைச் செவ்விதினோக்கி வாயெடுத்தாற்றிய மணிமேகலை யார்? அவள் துறத்தற்கு ஏது யாது? என்று வினவியபோழ்து அவளால் மேற்காட்டிய பிக்குணிஸங்கத்தைச்சார்ந்து இரண்டுவருஷஞ்சென்றபின்பே துறவறமேற்கோடல்வேண்டும் என்பது விதியாதலின் வருகென்று குழல்களைந்து அறம்படுத்தாள் என்பது சுருக்கமுதலியவற்றைக் கருதியதாகும்.

சித்திராபதியானவள் வயசுமுதிர்ந்தவளாயிருந்தும் தனதுமகள் குழல்களைந்ததைக் கேட்டும், துறவாதிருந்தமை அவளது இழிந்த பாத்தைமையை நன்கு புலப்படுத்தாநிற்கும்.

கண்ணகியம்மையுங் கோவலனுஞ் சுவர்க்கம்புக்கதை அறிந்த இடைமகளாகிய மாதரியும், தான் அடைக்கலமிழந்தது கருதி உயிரிழந்தும், இச்சித்திராபதிபோ துறவுபூணும் விருப்பும் பக்குவமும் இல்லாதவளாய் ஒருவேளை இருந்திருப்பினும் அவ்விடைமகளைப்போல இறத்தற்குந் துணிந்திலள்.

இவளது தீக்குணத்தை மாதவி முன்னரே அறிந்துகொண்டமையானன்றே "யான் நற்றிறம் படர்கேன் நீ மணிமேகலையை வான்றுயருறுக்குங் கணிகையர் கோலங் காணாதொழிக" என்று அவளிடம் ஓம்படைகூறி ஒப்புவித்துவிட்டுச் சீலாதிநோன்புமேற்கொண்டு வருவாளாயினள்.

மாதவி சித்திராபதியைக்கருதி ஐயுற்றிருந்தவாறே மணிமேகலை பூப்படைந்தவுடனே சித்திராபதியும் மாதவி, முன்னர்த் தனக்குரைத்தவற்றையெல்லாம் மறந்துவிட்டு, மாதவிக்குங் காமத்திற் போவாக்கொள்ளுமாறு மணிமேகலையின் உறுப்புமுதலியவற்றை இதுபோது வருணித்து மயக்குகின்றாள்.

இக்கூறியவற்றானே சிலப்பதிகாரங்கூறும் மாதவி நற்றாயும் மணிமேகலைகூறும் மாதவியின் நற்றாயும் வெவ்வேறானவர் என்று கருதற்கிடனின்மை காண்க.

மணிமேகலையும் பிக்குணிஸங்கத்தை அடைந்துவிட்டாள் என்னுஞ் செய்தி ஊர்முழுதும் பரம்பியது. பரம்பவே ஊர்முழுதும் மாதவியைப் பழிதூற்றற்கு முன்வந்துவிட்டது. இவ் வைகாசித்திங்களுக்குப் பதினொன்றுந்திங்களாகிய சித்திரையிலே விழா வந்துவிட்டது. அதுபோது மணிமேகலை பிக்குணிஸங்கத்தை அடைந்து நாற்பெரும்வாய்மையும் ஐம்பேரொழுக்கமு முதலியவற்றை மேற்கொண்டு இருந்தமையான் அவள் இந்திரவிழாவுக்கு வந்திலள்; இவளது வாராமைக்குக்காரணம் மாதவியே யாவாள் ஆதலின் தான் கெட்டதுமன்றி ஒருவகைத்தொடர்புமில்லாத மணிமேகலையையும் மாதவி இங்ஙனஞ் செய்துவிட்டனளே என்று அவ்வூரவரெல்லாங் கருதிவருதலின் அவர்க்கது தணியாத்துயராகித் தலைத்தலை மேல்வரலாயது.

> "தீவகச் சாந்தி செய்தரு நன்னாண்
> மணிமே கலையொடு மாதவி வாராத்
> தணியாத் துன்பந் தலைத்தலை மேல்வர" (மணி. II 3–5.)

மணிமேகலையை விழவிற்குச்செல்லும் நிலைமையிலே மாதவி வைத்திருப்பளேல் மாதவிவாராத துன்பந் தணிந்திருக்கும். அங்ஙனம் மணிமேகலையை வைத்திலளாதலின் அவள்மேல் வைத்திருந்த ஆறிவருகின்ற சினமும் ஆறாது ஓங்கி வளர்வதாயிற் றென்க.

இவ்விருவர்மேலும் எய்திய அலருக்கு மாதவியின் நற்றாயாகிய சித்ராதிபதி ஆற்றிலளாய்த் தனதுதோழியாகிய வயந்தமாலையை அம்மாதவிபாற்சென்று ஊரலர்தூற்றுதலை உணர்த்தி வருமாறுவிடுத்தனள்.

அங்ஙனம் விடுவிக்கப்பட்ட வயந்தமாலை மாதவிபாற்சென்று அவளது துறவுமேற்கொண்டுவாடிய மேனிகண்டுளம்வருந்தி அவளைவிளித்து உன்னோடு இவ்வூருற்றதொன்றுண்டு, நாடகமகளிர்க்கு நன்கனம்வகுத்த எல்லாத்துறையினும் முறைபோகிய நீ இங்ஙனம் நற்றவம்புரிந்தது நாணுடைத்தென்று அலகின்மூதூரான்றவரல்லது பலர்தொக்குரைக்கு பண்பில்வாய்மொழி நயம்பாடில்லை நாணுடைத்தென்று கூறிப வயந்தமாலைக்குக் கற்புடைமங்கையர்தம் நற்குணச் செய்கைகளையெல்லாம் நன்கனமெடுத்துவிளக்கிக் கற்புடை மங்கையர் தமக்கெலாங் கண்ணொனத்திகழுங் கண்ணகியம்மையின் மகளாகிய மணிமேகலையை அருந்தவப்படுத்தலல்லது, அவள் யாவதுந் திருந்தாச்செய்கை தீத்தொழிற்படாள்.

கண்ணகியம்மைக்கும் கோவலனுக்கும் நேர்ந்தவற்றையெல்லாம் அறிந்த யான் அறவணவடிகள் அடிமிசைவிழுந்து எனது கடுந்துயர் கூற அவர் நால்வகை வாய்மை, ஐம்பெரொழுக்க முதலியவற்றைக் கொள்கென வெனக்குக் கொடுத்தருளினர்; என்றுகூறி அவனை வெறிதே போகுமாறு விடுத்தாள்.

துறவுபூண்டமாதவியைப் பின்னருங் கணிகையர்கோலங்கோடற்குச் சித்திராபதி முயற்சித்ததாக மணிமேகலை கூறுகின்றது. ஆதலின் அது சிலப்பதிகாரத்தோடு முரண்பட்டதாகுமென்று பிள்ளையவர்கள் கூறுகின்றார்கள்.

"துறவுபூண்டவர் துறவறத்தைநடாத்தற்கு இயலாதுபோயினரேல் அவர் பூர்வநிலைமைக்குத் திரும்பவும்வந்துவிடலாம்" என்பது சங்கவிதிகளுள் ஒன்றாகும். இவ்விதிபற்றி மாதவியைக் கணிகையர்கோலங் கோடற்கு ஒருப்படுத்திவிடலாமென்று சித்திராபதிதுணிந்து முயற்சித்தலும், அவளது முயற்சியை இதுவென மணிமேகலை எடுத்துக்கூறுதலும், பிறவும் இழுக்காகா வென்க.

[மணிமேகலையிற்கூறிய ஊரலருரைத்ததை வயந்தமாலை மாதவிக் கெடுத்துரைத்தது கண்ணகியம்மை சுவர்க்கம்புக்கு நாற்பத்தாறுந் திங்களாகிய வைகாசியிலென்க]

"பொன்னேரனையாய் புகுந்தது கேளா
யுன்னோடிவ்வூ ருற்றதொன் றுண்டுகொல்."
(மணி. XX 16-17)

என்னும் இவற்றை முதலாகக்கொண்ட வடிகளை ஆதாரமாகக்கொண்ட பிள்ளையவர்கள் "மாதவி நடனத்திற்குவாராமைபற்றியதே பயங்கெழு மாநகர் அலரெனவறிபலாம். உன்னோடிவ்வூ ருற்றதொன் றுண்டுகொல் என்றதனானே மாதவி தானும் தவவொழுக்கம்பூண்டவளாகக் காணப் படவில்லை" என்றுங்கிடம்புகின்றனர்.

மணிமேகலையொடு மாதவி தீவகச்சாந்திக்கு வாராத் தனியாத் துன்பம் தலைத்தலை மேல்வர என்றும், "காவலன் பேரூர் கனையெரி யூட்டிய—மாபெரும் பத்தினி மகள்மணி மேகலை—யருந்தவப் படுத்துவ தல்ல தியாவதுங்—திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாஅள்."

என்றும், "மாதவ ருறைவிடம் புகுந்தேன்—மறவண நீத்த மாசறு கேள்வி-யறவண வடிக ளடிமிசை வீழ்ந்து-மாபெருந் துன்பங் கொண் டுள மயங்கிக்-காவல னுற்ற கடுந்துயர் கூற," பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்-பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்-பற்றின் வருவது முன்னது பின்ன-தற்றோ ருறுவ தறிகென் றருளி-யைவகைச்சீலத் தமைதிபுங் காட்டி-யுய்வகை யிவைகொளென் றறவோ னருளினன்" என்றும் வருவனற்றைநோக்கின் மணிமேகலையொடு மாதவி விழவுக்கு வாராததுகுறித்தே ஊரவராற் பழிதூற்றப்பட்டதென்றும், உன்னோ டிவ்வூ ருற்றதொன் றுண்டுகொல்" என்றது மணிமேகலை துறவுபூண்ட தற்குங் காரணம் மாதவிபாதலின் இங்ஙனங் கூறப்பட்டதென்றும், உன்னோ டிவ்வூ ருற்றதொன் றுண்டுகொல என்று தன்னை வினவிய வயந்தமாலைக்கு விடையாக, மணிமேகலை தீச்செயற்படாள் என்றிருத் தமையே போதிய சான்றாதும் என்றும், பிறவாறும் ஆராய்ச்சியாளர் பலர்க்கும் ஒப்பப் புலப்படுதல்காண்க.

மாதவி குழல்களைந்திருப்பளேல் அவளை "மணிமே கலையொடு மாதவி வாராத்-தணியாத் துன்பம்" தமக்கெல்லாஞ் செய்தனளாக ஊரவரெல்லாரும் அலநரைத்தனரென்று வயந்தமாலைவழியாக அவளுக்குச் சித்திராபதி அறிவித்திருக்கமாட்டாள் என்றுங்குப் பிள்ளையவர்கள் கூறுகின்றார்கள்.

இங்ஙனம் அவர்கள் கூறுதற்குக்காரணம் குழல்களைந்து துறவு மேற்கொண்டோர் எத்தகைய மயக்குரைகளைக் கேட்டனரேனும் தம் பழையநிலைமைக்கு ஒருபோதும் திரும்பாரென்பது போலும்.

அறிவிலியாகிய சித்திராபதி அவ்விருவரையும் ஒருங்கே வலைப் படுத்திவிடின் அவர்தம்முள் ஒருவரேனும்அகப்படுவர் என்றுங்கெண்ணி இங்ஙனமெல்லாமியம்பினள் என்னில் இதற்கு விடையின்மையின் அவர்கள்கூற்று அறவே பொருந்தாதென்க இப்பொருந்தா தன்றியும் பௌத்தப்பள்ளியையடைந்து துறவுமேற்கொண்டார் அங்கொண்ட மைக்கேற்ற விதிமுறைகளை ஒழுங்குபெறநடாத்திவரும் இயல்பற்றிருப்ப ரேல் அவ்விருக்கையர் தம் பழையநிலைமைக்குத் திரும்பக் கடவர் என் னும் அந்தச் சங்கவிதிகள் நன்கு ஊன்றிபதியத்தக்கன.

இவ் வைகாசித்திங்களுக்கும் அடுத்துவந்த சித்திரைத்திங்களுக் கும் இடையில் அமைந்த பதினொருதிங்களுக்குள்ளே மணிமேகலை

மலர்வனம்புக்கது முதலாக ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த தீறாகவுள்ள நிகழ்ச்சிகளெல்லாம் நடைபெற்றிருத்தல்வேண்டும்.

இச்சித்திரைத் திங்களின் இடைப்பகுதியிலே புகாரைக் கடல் கொண்டுவிட்டது. இவ்விடைப்பகுதியின் முடிவிலே மணிமேகலை ஆபுத்திரனோடு மணிபல்லவஞ்சென்று தீவதிலகையாற் புகாரழிவு முதலியவற்றைத் தெரிந்துகொண்டு வஞ்சிசென்று கண்ணகியம்மை மலரடி வணங்கிக் கச்சி சார்ந்து அங்கே அங்கராத்தரசன் ஒருதெய்வத்தின் கட்டளைப்படியே புதுமையாகச்சமைத்திருந்த மணிபல்லவத்திலே மணிமேகலாதெய்வத்திற்கும், தீவதிலகைக்கும் கோயில்கள் தனித்தனி சமைக்குமாறு பணித்து நிறைவேற்றுவித்தாள்.

நிறைவேற்றியவள், பஞ்சக்கொடுமையால் ஆண்டுப் பசிநோயுற்று வாடிய ஆருயிர்க்கெல்லாம் ஆமுதருத்திவரும்போது அறவணவடிகள் பால் உபதேசம்பெற்று நோற்றுவந்தாள்.

VI. தேவந்தி முதலோர் வஞ்சி சேர்தல்.

சித்திரைத்திங்கள் முதற்பகுதியிலே தேவந்திகை முதலியோர் மதுரைமுதலிய இடங்களைக் காண்பதற்குப் புறப்பட்டிருத்தல் வேண்டும். புறப்பட்டவர்கள் ஆடித்திங்களின் இரண்டாம்வாரத்திலே மதுரையை அடைந்து ஆண்டிருந்த மாதரி மகளோடு புறப்பட்டு வஞ்சிமாநகரையடையும் அமயத்தே மணிமேகலை துறவையுங் கேள்விப்பட்டிருத்தல் வேண்டும்.

> "வடதிசை வணக்கிய வானவர் பெருந்தகை
> கடவுட் கோலங் கட்புலம் புக்கபின்
> றேவந் திகையைச் செவ்விதி னோக்கி
> வாயெடுத் தரற்றிய மணிமேகலை" (சிலப். XXX 1—4.)

என்னுமிவற்றானே மணிமேகலை துறவைத் தேவந்திகை அதுபொழுதே கேள்விப்பட்டது புலப்படுகின்றது; மாதவி முதலியோர் துறவுக்கும் ஏனையோர் இறப்புக்கும் இன்னனம் அரற்றிலள் ஆதலின் என்க.

இனி,

"பருவ மன்றியும் பைந்தொடி நங்கை
திருவிழை கோல நீங்கின ளாதலி
னாற்றி னென்" (சிலப். XXX 35-37)

என்றதுகொண்டு மேற்கூறியதை மறுத்தல் சாலுங்கொல்லோவெனிற் சாலாது; என்னை? அதுபோது அங்ஙனம்வந்த துன்பத்துக்கு இது போது இங்ஙனமாற்றற்குரிய காரணவாய்ப்பின்மையின் என்க.

VII. மூன்றிளம்பெண்கள்.

கண்ணகியம்மையின் தாயும், மாமியும் அவ்வம்மைமேல்வைத்த அன்பின்மிகுதியானே வஞ்சிமாநகரத்திலே அரட்டன்செட்டி மனைவி வயிற்றில் இரட்டைகளாகப்பிறந்தனர். மாதரியும் அவ்வூரிலே திருமாலின் திருவடிபிடிப்பான்குலத்திற் சிறுமகளாகத் தோன்றினள்.

இம்மூவரையும் 'மடமொழி நல்லார்,' 'இரட்டைப்பெண்கள்,' 'சிறுமகள்,' 'முத்திறமகளி ' 'சிறுகுறுமகளிர்' என்று அடிகள்கூறியிருத்தலை உற்றுநோக்கின் அவர்களுக்குச் சற்றேறக்குறைய ஐந்தாண்டாதல் நிறைவுற்றிருத்தல் வேண்டும்.

கண்ணகியம்மை சுவர்க்கம்புக்க திங்களிலேயே மாதரியும் இறந்துபோயினள். அதற்கு இரண்டுதிங்கள்கழித்துக் கண்ணகியம்மையின் நற்றாயும், மாமியும் இறந்துபோயினர்.

இக் காலவரையறையும் யாம் மேலேகூறிய காலவரையறையும் தம்முள் ஒன்றனை மற்றொன்று நிலைநாட்டி வலியுறுதல் காண்க.

(தொடரும்.)

K. S. நவநீதகிருஷ்ண பாரதி.